Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 06, 2023

திங்கட்கிழமை, பெப்ரவரி 06, 2023 | ஒளி: 08 கதிர்: 202 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# லிட்ரோ காஸ் எகிறியது

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலையை ஞாயிற்றுக்கிழமை (05) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில், 334 ரூபாயால் அதிகரித்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 134 ரூபாயாலும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை கிட்டத்தட்ட 61 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்பு காரணமாக எரிவாயு சிலிண்டரின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




தொடர்ச்சி P2

# முக்கிய பிரேரணை 8இல் வருகிறது



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான அளவு நிதியை திரட்டிக்கொள்ள முடியாதுள்ளமை தொடர்பில், பாராளுமன்றத்துக்கு எதிர்வரும் 8ஆம் திகதியன்று அரசாங்கம் தெளிவுபடுத்தவுள்ளது,

இந்த விவகாரம் தொடர்பில், நிதியமைச்சால், பாராளுமன்றத்துக்கு தெளிவுபடுத்தப்படுமென அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வரவு- செலவுத் திட்டத்தில், அன்றைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், நிதியை விடுவிப்பதில் பாரிய பிரச்சினைகள் உள்ளன என்பது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அன்றையதினம் தெளிவுபடுத்தப்படவுள்ளது. அந்தத் தெளிவுபடுத்தலை அடிப்படையாகக் கொண்டு, பாராளுமன்றத்தில் யோசனையை முன்வைத்து அதனை நிறைவேற்றி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சில மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு, எதிர்வரும் 10ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் கோரிக்கையை முன்வைப்பதற்கும் அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாக அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

# பிரேரணை சமர்ப்பிக்க திட்டம் இல்லை



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நிதி வழங்குவது தொடர்பில் அரசாங்கம் பாராளுமன்றத்தில் பிரேரணையை சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவல்களை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஞாயிற்றுக்கிழமை (05) நிராகரித்தார்.

தொடர்ச்சி P2

# 2,500 ஏக்கர் காணிகளில் 80 ஏக்கரே விடுவிப்பு

■ றொசேரியன் லம்பேட்



2,500 ஏக்கர் காணிகள் உள்ள இடத்தில் வெறுமனே 80 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது என்று பலாலி காணி விடுவிப்பதற்காக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வரும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்தக் காணி விடுவிப்பில் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் வெறும் 109 ஏக்கர் காணியே விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இங்கு வெறும் 80 ஏக்கர் காணியே கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 2,500 ஏக்கர் காணிகள் உள்ள இடத்தில் வெறுமனே 80 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது. காணிகள் தற்போது விடுவிக்கப்பட்ட மக்கள் புன்னகைத்தாலும் அவர்களுக்கு முன் பெரியதொரு போராட்டம் உள்ளது.

கடந்த 30 வருட போராட்டம் காரணமாக உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மக்கள் எந்த ஒரு பொருளாதார வாய்பும் இல்லாத நிலையில் வறுமையில் வாடுகின்ற மக்களுக்கு அரசாங்கம் காணிகளை விடுவித்துள்ளது.

வெறும் காணிகளை மாத்திரம் வழங்கி அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால் அவர்களுக்கு வீடுகள் உடனே கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு வாழ்வாதார தொழில் முயற்சிக்கான உதவிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் இப்பகுதியில் மேலும் 2,500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் இந்த அரசாங்கம் விடுவிக்க வேண்டியுள்ளது. எனவே உள்நாட்டில் மக்கள் காணிகள் இல்லாது இருப்பது கொடுமையான விடயம்.

தொடர்ச்சி P2

# காணி விடுவிப்பு குறித்து பலாலி மக்கள் கவலை

■ றொசேரியன் லம்பேட்



பலாலியில் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள போதும் தங்களுக்கு எந்த வாழ்வாதாரமும் இல்லை என்றும் சந்தோஷமும் இல்லை என்றும் தாங்கள் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் பலாலி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து பலாலி வடக்கு வசாணி பகுதியை சேர்ந்த தேவமலர் என்ற பெண் கருத்து தெரிவிக்கையில், “அண்மைய நாள்களாக பலாலி பகுதியில் விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பான செய்திகளை நீங்கள் அதிகம் பார்த்திருப்பீர்கள். 1990 ஆண்டு யுத்தம் காரணமாக எனது தாய் இடம்பெயர்ந்து சென்றார்.

ஆனால் நாங்கள் இங்கே பிறக்கவில்லை. எங்கள் சொந்த நிலத்தை இப்போது தான் நாங்கள் பார்க்கின்றோம். இங்கு இருந்து இடம்பெயர்ந்த பின்னர் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தோம்; தற்போதும் அனுபவித்து வருகிறோம். எந்தவோர் அடிப்படை வசதியும் இல்லாத முகாம்களில் தங்க வைக்கப்பட்டோம்.

ஒழுங்கான மலசல கூடம் இல்லை; கிணறு இல்லை. முகாம்களின் அருகில் வசிக்கும் மக்களின் வீடுகளில் அவற்றுக்காக சென்றோம். தற்போது கூட இங்கு மலசல கூட வசதி, நீர் வசதி, மின் வசதி இல்லாமல் கடற்கரைகளில் நாங்கள் எமது தேவையை பூர்த்தி செய்கிறோம்.

தொடர்ச்சி P2

### இலங்கையுடன் இந்தியா சேர்ந்து திணித்த

# தமிழர்களுக்கான மரணப் பொதியே 13

## முற்றாக நிராகரிப்பதாக கஜேந்திரன் எம்.பி தெரிவிப்பு

## சமஷ்டி தீர்வு எட்டப்படும் வரை தொடந்து குரல் கொடுப்போம்



■ கனகராசா சரவணன்

இந்தியா தனது நலனுக்காக இலங்கையுடன் சேர்ந்து தமிழ் மக்கள் மீது திணித்த கூட்டுச் சதியே 13 ஆவது திருத்தச்சட்டம். இது தமிழர்களுக்கு சவக்குழி; மரண பொதி என்று தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்லவராசா கஜேந்திரன் இதை நாம் முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்தார்.

“தமிழ்த் தேசமும் இறைமையும் சுயநிர்ணயமும் அங்கிகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வு எட்டப்படும் வரை தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த மக்களுடன் தொடந்து குரல் கொடுக்கும்.

தொடர்ச்சி P2

# சஜித்தின் மேடையில் ஏறினார் சந்திம எம்.பி

## மாபெரும் கூட்டணியை அமைக்க முஸ்தீபு

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்புரிமையை பெறும் எண்ணம் இல்லை என்றும் மாபெரும் எதிர்க்கட்சி கூட்டணியை அமைப்பதற்கு பாடுபடவுள்ளதாகவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நிதி கோருகிறது நிலக்கரி நிறுவனம்

நுரைச்சோலை லக் விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை இயக்குவதற்கு தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர நிதி கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2

### உள்ளக சுயநிர்ணய உரிமைகள் மறுக்கப்பட்டால்

# வெளியக சுயநிர்ணய தீர்வை நோக்கி பயணிக்கத் தயார்

## சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு



உள்ளக சுயநிர்ணய உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டால் வெளியக சுயநிர்ணய தீர்வை நோக்கி பயணிப்பதற்கும் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

“தமிழர்களுக்கு இருள் நாள் பெப்ரவரி நான்கு எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பில் இடம்பெற்ற எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

பிரித்தானியர்கள் தமிழர்களின் தலையெழுத்தினை சிங்களவர்களிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றதால்தான் இன்று பாரிய நெருக்கடிகளை நாம் சந்தித்துள்ளோம்.

தொடர்ச்சி P2

# பர்வேஸ் முஷாரப் டுபாயில் காலமானர்



பாகிஸ்தானில் இராணுவ சதிப் புரட்சி ஊடாகப் பதவிக்கு வந்த முன்னாள் இராணுவத் தளபதியான ஓய்வுபெற்ற ஜெனரல் பர்வேஸ் முஷாரஃப் காலமானார்.

தொடர்ச்சி P2



# இந்திய அரசாங்கத்தால் 500 பஸ்கள் அன்பளிப்பு

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தையொட்டி, இந்திய அரசாங்கம் 500 பஸ்களை இலங்கைக்கு வழங்கியது.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து பஸ்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (05) பொறுப்பேற்று, போக்குவரத்து அமைச்சுக்கு ஒப்படைத்தார்.

இந்த உத்தியோகபூர்வ வைபவத்தில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் பங்கேற்று, பஸ்களுக்கான திறப்புகளை சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

### மருதானை ஆர்ப்பாட்ட விவகாரம்

# விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு



மருதானையில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது, நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை பிரயோகம் நடத்தப்பட்டமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், முதற்கட்ட அறிக்கை ஆணைக்குழுவிடம் இன்று (06) கையளிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

### தேர்தலுக்கு நிதி கோரி

# அழுத்தம் கொடுப்பதை நிறுத்த வேண்டும்



கடினமான சூழ்நிலையில் பொருளாதார நிலைமையை நிர்வகிக்கும் நேரத்தில் தேர்தலுக்கு நிதி வழங்குமாறு திறைசேரி அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பதை பல்வேறு பிரிவினரும் நிறுத்த வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, ஞாயிற்றுக்கிழமை (05) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# டக்ளஸின் முயற்சியால் பூசை வழிபாட்டுக்கு அனுமதி

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் நீண்டகாலமாக உயர்பாதுகாப்பு வலயத்தை காரணம் காட்டி, பூசை வழிபாடுகளுக்கு தடுக்கப்பட்டுவந்த வாசாவிளான் மேற்கு மானம்பிராய் பிள்ளையார் கோவிலில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள பொதுமக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (05) முதல் அனுமதி வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## முக்கிய பிரேரணை 8இல் வருகிறது

இவ்வருடம் நடத்தப்படவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 10 மில்லியன் ரூபாய், கடந்த வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டது.

எனினும், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, நிதியை விடுவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதை நிதியமைச்சு தொடர்ச்சியாக அறிவுறுத்தி வரும் நிலையிலேயே, மேற்கண்டவாறு தீர்மானமொன்றை எடுப்பதற்கு அரசாங்கம் கலந்தாலோசித்து வருவதாக அறியமுடிகின்றது.

## பிரேரணை சமர்ப்பிக்க...

தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்க முடியாத நிலை குறித்து அரசாங்கம் இந்த வாரம் பாராளுமன்றத்தில் பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளதாக செய்தி வெளியாகியிருந்தது.

இதுகுறித்து, அமைச்சர் கலந்து கொண்ட கூட்டத்தில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலுக்கு நிதி வழங்குவதில் உள்ள சிரமங்கள் குறித்து திறைசேரியால் சத்தியக்கடதாசி மாத்திரம் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பர்வேஸ் முஷாரப்...

சில காலமாக உடல் நலக் குறைவால் அவதிப்பட்டு வந்த நிலையில் தனது 79ஆவது வயதில் டுபாயில் காலமானார்.

பர்வேஸ் முஷாரஃப் ஒகஸ்ட் 11, 1943ஆம் ஆண்டு புதுடெல்லியில் உருது பேசும் குடும்பத்தில் பிறந்தார். அவரது பெற்றோர் 1947இல் இந்திய பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தான் கராச்சிக்கு குடிபெயர்ந்தனர்.

1964இல் பாகிஸ்தான் இராணுவத்தில் சேர்ந்த முஷாரப், படிப்படியாக உயர்ந்து தலைமை தளபதியானார். நவாஸ் ஷெரீப் ஆட்சியை கவிழ்த்து, 1999இல் அதிகாரத்தை கைப்பற்றினார்.

இராணுவ ஆட்சியை பிரகடனம் செய்த முஷாரப், பாகிஸ்தான் பாராளுமன்றதை கலைத்து அரசியல் சட்டத்தையும் முடக்கினார். 2001இல் பாகிஸ்தான் ஜனாதிபதியாக பதவியேற்ற முஷாரப், காஷ்மீர் பிரச்சினைக்காக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டக்ளஸின் முயற்சியால்..



உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள குறித்த கோவிலுக்கு பக்தர்கள் சென்றுவர ஆரம்ப காலங்களில் அனுமதி கொடுக்கப்பட்டு வந்த போதிலும் பின்னர் பாதுகாப்பு விடயங்களை காரணம் காட்டி மறுக்கப்பட்டது.

இந்நிலையில், கோவில் நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, தமது பூர்வீக கோவிலில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கிணங்க பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பூசை வழிபாடுகளை பொதுமக்கள் மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் இந்துக்களின் சிறப்பு நாளான தைப்பூச தினமான நேற்று (05) கோவிலுக்கு பக்தர்கள் செல்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டதற்க இணங்க தைப்பூச வழிபாடுகள் மற்றும் சிறப்பு பொங்கல் நிகழ்வுகளை பொதுமக்கள் முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சிறப்பு பூசை வழிபாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதிகளாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன், உதவி நிர்வாக பொறுப்பாளர் ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அத்துடன் குறித்த பூசை வழிபாடுகளில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி வடக்கு பிரதேச நிர்வாக பொறுப்பாளரும் பிரதேச சபை உறுப்பினருமான அன்பு - ஜெயபாலசிங்கம், குறித்த பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பூசை வழிபாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

இதனிடையே பாதுகாப்பு தரப்பினரும் இன்றையதினம் பொதுமக்கள் சென்றுவர அனுமதி வழங்கப்பட்ட வாசாவிளான் மேற்கு மானம்பிராய் பிள்ளையார் கோவிலில் பூசை வழிபாடுகளுக்கு தமது முழுமையான ஒத்துழைப்புகளையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2,500 ஏக்கர் காணிகளில் 80 ஏக்கரே விடுவிப்பு

எனவே, இம்முறை ஜெனீவா அமர்வுக்கு முன்னதாக இந்த அரசாங்கம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக காணிகளை விடுவிக்க வேண்டும்.

நாங்கள் தொடர் போராட்டங்களை மேற்கொண்டதன் விளைவாகவே இந்தக் காணி விடுவிப்பைப் பார்க்கிறோம். ஆனால் வெறுமனே இந்த 109 ஏக்கர் காணி விடுவிப்பில் நாங்கள் திருப்தி கொள்ளவில்லை. 2009 யுத்தம் முடிந்து விட்டது.

யாருக்கு பாதுகாப்பு? மக்களின் காணிகளில் உணவகங்கள் கட்டுவதற்கும்,விடுதிகள் கட்டுவதற்கும்,தென்னந்தோப்பு வைப்பதற்கும், உல்லாச வாழ்க்கை வாழ்வதற்குமா இந்த மக்களின் காணி.

எனவே மக்களின் காணிகள் அனைத்தும் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என சிவில் சமூக அமைப்புகள் சார்பாக கேட்டுக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## காணி விடுவிப்பு குறித்து பலாலி மக்கள் கவலை

காணிகளை விடுவித்தது எமக்கு மகிழ்ச்சிதான். ஆனால் இன்னும் பல இடங்கள் விடுவிக்க வேண்டியுள்ளது. அந்த மக்களின் சந்தோசங்களையும் நாங்கள் பார்க்க வேண்டும். தற்போது காணிகளை விடுவித்துள்ளபோதும் எங்களுக்கு எந்த வாழ்வாதாரமும் இல்லை. வீடு சீரமைப்பதாக இருந்தாலும் காணி துப்புரவாக்குவது என்றாலும் நீங்கள் வழங்கும் பணம் போதுமானதாக இல்லை.

இந்தக் கடற்கரையின் வருமானத்தை நம்பியே நாங்கள் வாழ்கிறோம். எனவே விரைவில் எங்கள் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய உதவிகளையும் மலசல கூட வசதி, நீர் வசதி, மின்சார வசதிகளையும் மேற்கொண்டு தருமாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

## விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு

75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு அதிக தொகை செலவிடப்பட்டதை எதிர்த்து சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவினர் வெள்ளிக்கிழமை (03) இரவு மருதானையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

மற்றொரு குழுவினர் போராட்டம் நடைபெறும் இடத்துக்குச் சென்றதை அடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்ட நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸாரால், நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை பிரயோகம் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக குழுவொன்று சம்பவ இடத்துக்கு விஜயம் செய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்த முதற்கட்ட அறிக்கை இன்று (06) ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட உள்ளதாகவும் அறிக்கையின் அடிப்படையில் விசாரணைகள் தொடரும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைதியின்மையின் போது கைது செய்யப்பட்ட மூவர் மாளிகாகந்த நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சனிக்கிழமை (04) பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## நிதி கோருகிறது...

அமைச்சருக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டியுள்ள அவர், சில கப்பல்களுக்கு நிலுவை மற்றும் முற்பணம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார நெருக்கடி இருந்தபோதிலும், ஆண்டு முழுவதும் மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான நிலக்கரி ஏற்றுமதியை இலங்கை பெற முடிந்தது என்றும் நிலக்கரி கொள்வனவுக்கு 456 கோடி ரூபாய் தேவைப்படுவதாகவும் அவர் அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் 5 கப்பல்கள் நாட்டுக்கு வருகை தந்ததாகவும் இந்த மாதத்தில் சுமார் ஐந்து முதல் ஏழு நிலக்கரி கப்பல்கள் நாட்டுக்கு வருகை தரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் இந்த மாதத்துக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யத் தேவையான நிலக்கரி கையிருப்பு தமது நிறுவனத்திடம் உள்ளதாகவும் சுமனசேகர தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## லிட்ரோ காஸ் எகிறியது

4,409 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4,743 ரூபாயாகவும், 5 மற்றும் 2.3 கிலோ கிராம் சிலிண்டர்களின் புதிய விலை முறையே 1,904 ரூபாயாகவும் 883 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்படும் என்பதுடன், ஏனைய மாவட்டங்களுக்கு விலைகளில் மாறுபாடுகள் காணப்படும்.

## தமிழர்களுக்கான மரணப்...

தென்தமிழீழ மண்ணில் நின்று கொண்டு இந்த மக்கள் செய்யும் பிரகடனம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெப்ரவரி 4 கரிநாள் ஒற்றையாட்சியையும் 13ஆவது திருத்தத்தை ஒழிப்போம் என்ற தொனிப்பொருளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டு. நகரில் சனிக்கிழமை (04) நடத்திய ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "இலங்கை தீவில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் இந்தியாவினுடைய நலன்கள் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பூகோள நலன்களைப் பேணுவதற்கும் 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ற பெயரில் இந்தியாவும் இலங்கையும் கூட்டுச்சதி செய்து, 13ஆவது திருத்த சட்டத்தை உருவாகினர்.

அதன் மூலம் மாகாண சபை கொண்டுவரப்பட்டு, அதன் அதிகாரம் முழுவதும் ஜனாதிபதியிடம் இருக்கின்றது. அவரால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம் இருக்கின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கோ அமைச்சர்களுக்கோ எந்த அதிகாரமும் இல்லை.

மாகாண சபைக்கும் எந்த அதிகாரமும் இல்லை என்பதுடன் காணி, பொலிஸ் அதிகாரம் கிடையாது என்பதுடன் ஜனாதிபதிக்கு முழு அதிகாரமும் என உயர் நீதிமன்றம் 30 தீர்ப்புகளில் தெரிவித்துள்ளது.

2016 ஜனவரி மாதத்தில் இருந்து 2018 டிசெம்பர் மாதத்துக்குள் ரணில் - மைத்திரி நல்லாட்சி காலத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இனப்பிரச்சனைக்கு தீர்வு என்ற பெயரில் ஓர் அரசியலமைப்பு வரைவை உருவாக்கினர்.

அந்த அரசியலமைப்பில் இரா. சம்பந்தன் பௌத்த மதம் முதன்மை மதம் என எழுத்துமூலமாக கையொப்பம் வைத்துள்ளார். இது தமிழர்களுக்கு செய்யப்பட்ட மிகப் பெரும் துரோகம்.

அதேபோல, வடக்கு, கிழக்கு இணைப்பை கைவிடுவதற்கும் சமஷ்டியை கைவிடுவதற்கும் இணங்கியுள்ளதுடன் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை எங்கள் மீது திணிக்கின்ற ஒற்றையாட்சி அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு இணங்கியுள்ளார். அதை நாங்கள் இன்று நிராகரிக்கும் வகையில், இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம்.

13ஆவது திருத்த சட்டத்தை தீர்வாக வலியுறுத்தி தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, விக்கினேஸ்வரன் அணியினர் நிற்கின்றனர். ஏனையவர்கள் அரசாங்கத்துடன் நின்று கொண்டு, ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இன்று அவர்களும் சுதந்திர தின கரிநாள் என்ற பேர்வையில் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். ஏனென்றால், ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து ஒற்றையாட்சிக்குள் 13 ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டனர்.

மக்கள் தங்களை இனங்கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காக ரணிலுக்கு எதிரி போல் நாடகமாடிக் கொண்டுள்ளனர். இனப்பிரச்சினையை ஓராண்டில் தீர்க்கப் போவதாகவும் தமிழ்த் தலைவர்கள் ஒத்துழைக்குமாறும் கடந்த நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஓர் அழைப்பு விடுத்தார்.

இதன்போது ரணிலுக்கு பதிலளித்த எம்.ஏ சுமந்திரன், இனப்பிரச்சினை தீர்வுக்கு எடுக்கின்ற முயற்சியை வரவேற்பதாகவும் 2016 நல்லாட்சி காலத்தில் வரையப்பட்ட அரசியல் அமைப்பின் அடிப்படையில் தீர்வுகாண முற்பட்டால் ஓராண்டு தேவையில்லை; மூன்று மாதத்தில் தீர்வு வந்துவிடும் என்றார்.

இந்தியா தனது பிராந்திய நலன்களை பேணுவதற்காக தமிழர்களை 13 ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்து தமிழர்களை அழிக்கின்ற நடவடிக்கைக்கு தொடர்ந்தும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றது என்றார்.

## அழுத்தம் கொடுப்பதை...

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற அழுத்தங்களைக் கொண்டுவரும் பல்வேறு பிரிவினரும் சம்பளம், ஓய்வூதியம், சமூகப் பலன்கள் மற்றும் மருந்துகளை வாங்குவதற்கு அரசாங்கம் நிதி திரட்டுவதில் உள்ள சிரமங்களை உணர வேண்டும் என்றார்.

செலவினங்களைக் குறைத்து, கிடைக்கும் நிதியை நிர்வகிப்பதுடன், பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கம் சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் தற்போதைய நிலைமையை சமாளிக்காவிட்டால் மீண்டும் எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் பொருளாதாரம் புத்துயிர் பெறும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் சர்வதேசத்தின் உதவிகள் வந்துகொண்டு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது அரசியலமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்ட கடமை என்பதால், பகுதி பகுதியாகவேனும் நிதி வழங்கப்படுமென நிதி அமைச்சு ஏற்கெனவே தெரிவித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இம்மாத செலவுக்கு ரூ. 77 கோடி வேண்டும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான இந்த மாத அடிப்படைச் செலவுகளுக்கு 77 கோடி ரூபாவை வழங்குமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழு தவிசாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அடிப்படைச் செலவுகளுக்கு குறித்த தொகை செலவாகும் என்று கணக்கிடப்பட்டு உள்ளதாகவும் ஒரே தடவையாகவோ அல்லது தவணை முறையிலோ குறித்த தொகையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவரது கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவிடம் தேர்தல் செலவுக்காக 4 கோடி ரூபாயை நிதி அமைச்சு வழங்கியுள்ள நிலையில், முழு நடவடிக்கைகளுக்காக 400 கோடி ரூபாய் செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சஜித்தின் மேடையில்...

அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதே தமது நோக்கம் என்றும் தற்போதைய அரசாங்கத்தை தோற்கடிக்க அனைத்து சரியான சிந்தனையுள்ள மக்களும் ஒன்று சேர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காலி மாவட்டத்தில் ஹினிதுமவில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் சனிக்கிழமை (04) இடம்பெற்ற கூட்டத்தில் சந்திம எம்.பி கலந்து கொண்டிருந்தமை குறித்து வினவியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

மாபெரும் எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்குவதற்கான செயற்பாட்டின் ஒரு பகுதியாகவே தான் ஐக்கிய மக்கள் சக்தியின் மேடையில் ஏறியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் எதிர்நோக்கும் பட்டினியை முடிவுக்குக் கொண்டுவர எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் குறித்த மேடையில் அவர் அறிவித்திருந்தார்.

## சின்னத் தேர்தலில் செலவைத் தாண்டினால் சட்ட நடவடிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்கான நிர்ணயிக்கப்பட்ட செலவின் வரம்பை மீறும் வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பஃப்ரல்) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

எவ்வளவு தொகை செலவிட வேண்டும் என்பது குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்த பஃப்ரல் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிகமாக அனைத்து அரசியல் கட்சிகளின் சுயேச்சைக் குழுக்களுக்கும் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் செலவீனம் ஒழுங்குப்படுத்தல் தொடர்பான சட்டமூலம் ஜனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வாக்காளர் ஒருவருக்கு வேட்பாளர் ஒருவர் குறைந்தபட்சம் 15 ரூபாயும் அரசியல் கட்சியொன்று குறைந்தபட்சம் 08 ரூபாயும் செலவிட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு முன்வைத்த யோசனைக்கு அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வெளியக சுயநிர்ணய...

வெறுமனே பேசிக் கொண்டிருக்காமல் எமக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக செயலில் இறங்க வேண்டிய காலம் அண்மித்துள்ளது என்றார்.

நாட்டில் இருந்த தமிழ் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளை இந்தப் பெரும்பான்மை அரசாங்கமே தனிச்சிங்களச் சட்டத்தினைக் கொண்டு வந்து நாட்டை விட்டு வெளியேற்றியது என்பதே உண்மையாகும்.

ஆனால், தற்போது தென்னிலங்கையில் இருந்து பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் வெளியேறுவது குறித்து குரல் கொடுக்கின்றனர். அவர்களுக்கு பொருளாதார சுதந்திரம் மட்டுமே தற்போது மறுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் தமிழர்களுக்கு தொடர்ந்தும் பொருளாதாரம், அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டன; மறுக்கப்பட்டும் வருகின்றன என்றார்.

நாட்டுக்கு அதிகளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் மலையக மக்களுக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. நாட்டில் இருந்து அடித்து விரட்டப்பட்டு குடியுரிமை பறிக்கப்பட்ட போதிலும் இன்றுவரை நாட்டுக்கு மிகப்பாரியளவில் அந்நியச் செலாவணியை மலையக மக்கள் பெற்றுக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

அத்துடன் கிழக்கின் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் பல தற்போது பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பறித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

போராட்டத்தின் வடிவங்கள் மாறினாலும் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு அரசியல் ரீதியிலான போராட்டத்தினை தமிழரசுக்கட்சி ஆரம்பித்திருக்கின்றது என்றார்.

இதற்கு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இணைந்து பயணிக்க வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. எமக்கான இலக்கினை எப்போதும் மாற்றப்பேவதில்லை. தொடர்ந்தும் எமது இலக்கினை அடைவதற்கான வழிகளில் பயணிப்போம் என அழைப்பு விடுத்தார்.

தமிழர்கள் இன்று இழந்துள்ள அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டிய தேவை எமக்கு உள்ளது. அதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழரசுக் கட்சி முன்னெடுத்துச் செல்லும் என்பதை நாம் உறுதியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான பாதையில் தமிழரசுக் கட்சி தொடர்ந்து பயணிக்கும்.

வெறுமனே நாம் பேசிக் கொண்டிருக்காமல் இந்த ஆண்டின் இறுதிக்குள் எமக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதனைத் தெரிவித்து கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மறைந்திருக்கும் தொன்மம்

ந.ரிலக்ஷனா
(ஊடகக்கற்கைகள் துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் )





(ஜனவரி 26ஆம் திகதி வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

இந்த வௌவால் புறாக் குகையானது பல்வேறு கதைகளால் சூழப்பட்டுள்ளது என்பதை நான் அறிந்துகொண்டேன். அதனைத் தொடர்ந்து ஒரு உறுதியான பொறிக்கப்பட்ட தொடர்பு கதை என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக ஒரு ஆதாரப்பூர்வமான விடயத்தை தேடிச் செல்ல ஆரம்பித்தேன். கந்த குட்டி பாலச்சந்திரன் ஐயா கூறியதில் எனக்கு ஒரு நம்பிக்கை எழுந்தது. மாருதப்புரவீகவல்லி 200 300க்கும் மேற்பட்ட ஆட்களைக் இங்கு கொண்டு வந்து அவர்களால் இந்த குகையை அமைத்தார் எனவும் இந்த குகையால் கீரிமலை கேணிக்கு செல்வதற்காக மாருதப்புரவீகவல்லி தான் இந்த குகையை அமைத்தார் என உறுதியாக சொன்னார்.

இவ்வாறு அங்கு கீரிமலை பிரதேசத்தை சுற்றியுள்ள இடங்களை விசாரித்த பின்னர் சேகரித்த தகவல்களை எல்லாம் கொண்டு தொல்லியல் திணைக்களத்திற்குச் சென்றேன். தொல்லியல் திணைக்களத்தினை விசாரித்தால் என்ன முடிவு என்பதை அறிந்து கொள்ளலாம் என்பதற்காக அங்கு சென்றேன். சென்று அங்குள்ள தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரை சந்தித்தேன் அவரிடம் இருந்து இக்குகை தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக, கீரிமலையில் வௌவால் புறாக் குகை என்ற ஒரு பண்பாட்டு தொல்லியல் சின்னம் காணப்படுகின்றது அது பாதுகாப்பற்ற நிலையில் சிதைவடைந்து செல்கின்றது அதற்காக உங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன அது பற்றி கூறுங்கள் என்று கேட்டேன்.



இவ்வாறான ஒரு குகை காணப்படுவதாகவும் அந்த குகையானது பல்வேறு கட்டுக்கதைகளால் சூழப்பட்டுள்ளது என்பதாலும் ஒரு உறுதிப்படுத்தப்பட்ட தகவல் தமக்கு கிடைக்காத காரணத்தால் இன்று வரை அவை தொல்லியல் ரீதியாக பாதுகாகப்படாமல் காணப்பட்டது என்று சொன்னார். இக் குகை இருக்கும் அந்தக் காணி தனிநபர் காணி அந்த குகை இருக்கும் பகுதியை மட்டும் அரசாங்கத்துக்கு தருவதாக ஒப்புக்கொள்ளாத காரணத்தால் இன்று வரை அதற்கான வழக்குகள் இடம்பெற்று இப்பொழுது தான் அவை அரசாங்கத்திற்காக தொல்லியல் சார் இடம்என பதியப்பட்டுள்ளது என்று கூறினார். அதன்பின்னர் அந்த வௌவால் புறாக் குகைக்கு மாருதப்புரவீகவல்லிக்கும் தொடர்பு இருக்கின்றது என பலர் கூறுகின்றார்கள் தொல்லியல் ரீதியான ஒரு மரபுச் சின்னமாக காணப்படுகின்றது அத்தோடு மரங்கள் எல்லாம் வளர்ந்து கற்கள் எல்லாம் இடிந்து துர்நாற்றம் வீசுகின்ற நிலைமையில் பாதைகள் எல்லாம் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அவற்றை பராமரிக்க வேண்டியது எங்களுடைய கடமை அதை வெளியில் கொண்டுவர வேண்டியதும் எங்களுடைய கடமை என்று கூறினார். மேலும் கூறுகையில் அதில் இருக்கின்ற கற்கள் பளிங்கு கற்கள் போன்று மினுமினுப்பானவை எனவும் கலை மரபுகள் கொண்டவையாக அமைந்துள்ளது எனவும் இவை ஒரு தொல்லியல் சான்றாக கண்முன்னே அனைவரும் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு சான்றாக அமைந்திருக்கின்றது எனவும் வருங்கால சந்ததியினர் நமது தமிழர் பாரம்பரியத்தை பேணிப் பாதுகாப்பதற்கும் கண்டறிவதற்கும் அவற்றின் வரலாற்றை தெரிந்து கொள்வதற்கும் இவை இந்த குகையானது பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதும் பாராமரிக்கப்படவேண்டிய ஒரு தொல்லியல் சின்னமாக விளங்குகின்றது எனவும் கூறினார். அதற்காக நாம் இற்றை வரை செய்து கொண்டிருக்கும் முயற்சிகள் கண்டிப்பாக பலன் அளிக்கும் எனவும் அது ஒரு காலத்தில் தொல்லியல் சின்னமாக மாற்றமடைந்து பாதுகாக்கப்பட்டு வரும் என்றும் தொல்லியல் திணைக்களம் இதனை பதிவு செய்து வைத்துள்ளது இனி அதனை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கூறினார்.

ஆகவே இவ்வாறானவர்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு நான் பின்னர் ஒரு முடிவுக்கு வந்தேன் இவ்வாறு கீரிமலையில் இருக்கின்ற இந்த வௌவால் புறாக்குகைக்கும் மாருதப்புரவீகவல்விக்கும் தொடர்பு இருக்கின்றது எனவும் கோயில் பூசகர் மற்றும் கிராமவாசி அத்தோடு தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர் கூறியதும் அத்தோடு நான் தேடிய புராண இதிகாச புத்தகங்கள் குறிப்பிட்ட விடயங்களும் அவற்றோடு கீரிமலை சிவ பூமி மண்டபத்தில் மாருதப்புரவீகவல்லி குதிரை முகத்துடன் வந்த கதை குதிரை முகம் நீங்கிய கதை என்பன படமாக வரைந்திருந்தமையும் எனக்கு ஒரு நம்பிக்கையை தந்திருந்தது. அத்தோடு கீரிமலைப்பிரதேசத்தில் நகுலேஸ்வரம் இருந்து இடப்பக்கமாக ஒரு 150 கிலோமீட்டர் சென்ற உடன் ஒரு தனியார் காணிகளில் பத்தையாக வளர்ந்துள்ள மரத்திற்கு கீழே அந்த வௌவால் புறாக் குகை இருக்கின்றது. ஆகவே நான் அங்கு சென்று பார்த்தேன். வௌவால் புறாக் குகையின் தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது என அறிந்து கொண்டேன் நேரில் பார்த்து மேலே அவர்கள் கூறிய கருத்துப்படியே குகைகள் பாதுகாப்பற்று சிதைவடைந்த நிலையிலே காணப்பட்டிருந்தது.

ஆகையால் இந்த வௌவால் புறாக் குகைக்கும் மாருதப்புரவீகவல்லிக்கும் ஒரு தொடர்பு இருக்கின்றது என அறிந்து கொண்டேன் அத்தோடு இது நமது தமிழர் பாரம்பரிய மரபுச் சின்னங்களில் ஒன்றாக இருக்கின்றது அவை பலருக்குத் தெரிகின்றது நூற்றுக்கணக்கான பேருக்கு தெரியவே இல்லை ஏன் கீரிமலையில் இருப்பவர்கள் கூட இப்படி ஒரு குகை இருக்கின்றதா என்று கேள்வியை கேட்கும் அளவிற்கு தான் இருக்கின்றது மக்களுக்கு நமது பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை அதை தெரியப்படுத்த வேண்டியதும் நம்மளுடைய கடமை ஆகையால் தான் இவ்வாறு மறைந்திருக்கின்ற பேணப்படாத பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்ற வௌவால் புறாக் குகையானது அனைவருக்கும் தெரிய வந்து அது நமது தமிழர் அடையாளம் பண்பாடு என்ற உணர்வை ஏற்படுத்தி முழுமையாக புணரமைக்கப்பட்டு அவற்றின் முழுமையான வரலாறு என்ன என்பது அறியப்பட வேண்டிய அவசியம் கட்டாயமானது.

ஆகவே இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்லியல் மரபுச் சின்னமாக விளங்கும் இந்த வௌவால் புறாக் குகையானது சிதைவடைந்து கொண்டு செல்கின்றது ஆகையால் அவற்றை உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு ஒரு தொல்லியல் மரபுச் சின்னமாக பேணப்பட்டு வருங்கால சந்ததிக்கு நம் அடையாளத்தை கண் முன்னே கொண்டு வந்து நிறுத்த வேண்டியது நாம் ஒருவருடைய கடமையாகும். (முற்றும்)





அரசாங்கத்தின் தவறான கொள்கைகளால்

# “பிரச்சினைகள் கூடுகின்றன”

தற்போதைய அரசாங்கம் தவறான கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வதாகவும், இவர்களின் இத்தகைய செயற்பாடுகளால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ராஜபக்ஷ குடும்பம் இந்நாட்டை அழித்து, வறிய நிலைக்கு இட்டுச் சென்றதாகவும்,சிறு குழந்தை முதல் முதியவர் வரை,அரச ஊழியர் முதல் கூலித் தொழிலாளி வரை அனைவரினதும் இயல்பு வாழ்க்கை குழம்பியுள்ளதாகவும்,இந்நாட்டின் 220 இலட்சம் மக்கள் இனி எந்த ஆட்சியாளருக்கும், தலைவருக்கும், அரசியல்வாதிகளுக்கும் அடிமைகள் அல்ல எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ராஜபக்ஷவின் அடிமைத்தனத்தை இன்னமும் உறுதிப்படுத்தும் ‘மொட்டு - யானை’ கூட்டு அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான முதல் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



பாணந்துறையில் சனிக்கிழமை (04) இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

உலகில் எந்த நாடும் பொருளாதாரத்தை சுருக்கி பிரச்சினைகளைத் தீர்த்ததாக இல்லை. தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி, நாட்டு மக்களை அழிக்க முயல்கிறது. தேவையை குறைப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறார்கள். என்றாலும்,அது தவறு. இந்தப் பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதே ஒரே தீர்வு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

2019 இல் ஒரு தவறு செய்யப்பட்டதாகவும், 2023 இல் மக்கள் மற்றொருவருக்குப் பின்னால் ஓடுவதாகவும், இந்நாள்களில் பொய் சொல்லி தம்பட்டம் அடிக்கும் புரட்சியாளர்களுக்கு சர்வதேச ஆதரவு கிடைக்காது எனவும்,எமது நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் திறன் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடகொரியா,கியூபா போன்ற சோசலிச நாடுகள் எமது நாட்டை கட்டியெழுப்ப உதவாது என்பதால் இதுபோன்ற சோசலிசவாதிகளின் பின்னால் செல்ல வேண்டாம் எனவும், இவ்வாறான சோசலிசவாதிகளின் பின்னால் செல்வதால் நாட்டை தற்போதைய நிலையில் இருந்து மேலும் வீழ்ச்சியடையச் செய்யும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## கள்ளக்காதலால் மகனின் தாய் கொலை

பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டு, அவருடைய சடலம் எம்பிலிப்பிட்டிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.


எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் உட்பட மூவர், சூரியவெவவை வசிப்பிடமாகக் கொண்ட 58 வயதான பெண்ணொருவரை கடத்திச் சென்று இவ்வாறு படுகொலை செய்துள்ளனர் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அந்தப் பெண், இரண்டு மாடிகளைக் கொண்ட வீட்டில் வசித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் மகனுக்கும் ஹோட்டல் உரிமையாளரின் மனைவிக்கும் இடையில், கள்ளத்தொடர்பு இருந்துள்ளது. இதுவே, இந்தப் படுகொலைக்கு காரணமென கண்டறியப்பட்டுள்ளது.

அவ்விருவரும் தப்பிச் சென்றுவிட்டனர். இந்நிலையிலேயே அவருடைய தாய், படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மூவரும் பிரதேசத்தில் இருந்து தலைமறைவாகிவிட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.




## 21/4 தாக்குதல் சந்தேகநபர் மரணம்

எம் எஸ் எம் நூர்தீன்

கொழும்பில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த காத்தான்குடியைச் சேர்ந்த வை.பி அப்துல் ரஊப் (வயது 52) நேற்று (05) ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இவர், 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேக நபராக 2019 மே மாதம் ஐந்தாம் திகதி கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். மாரடைப்பு ஏற்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்ததாகவும் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இருந்ததாகவும் இரண்டு முறை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாகவும் தெரிய வருகிறது

புதிய காத்தான்குடி விடுதி வீதியைச் சேர்ந்த இவர், நான்கு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

## பேஸ்புக் விருந்தில் பெண் துஷ்பிரயோகம்

பாணந்துறை சுற்றுலா ஹோட்டலில் நடத்தப்பட்ட பேஸ்புக் விருந்தை சுற்றிவளைத்த பொலிஸார், அங்கிருந்த பெண்கள் 10 பேர் உள்ளிட்ட 41 பேரை தமது பொறுப்பின் கீழ் கொண்டுவந்தனர்.

அதில் பங்கேற்வர்களிடம் இருந்து கஞ்சா, குஷ் போதைப்பொருள் உட்பட மதுபானங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹோட்டல் உரிமையாளர் மற்றும் அவருடைய மனைவியையும் பொலிஸார் தமது பொறுப்பின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

விருந்துபசாரத்தின் போது, போதையில் இருந்த காலியைச் சேர்ந்த பெண்ணொருவரை அறைக்கு தூக்கிச் சென்று, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் இளைஞர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அனைவரையும் பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்தோனேசியாவின் யுத்தக் கப்பல்

## இலங்கையிலிருந்து புறப்பட்டது

இந்தோனேசிய கடற்படையின் ‘KRI Raden Eddy Martadinata - (REM - 331)’ என்ற யுத்தக் கப்பலானது, இலங்கையிலிருந்து புறப்பட்டுள்ளது.

இந்த மாதம் 3ஆம் திகதி, உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்தோனேசிய கடற்படைக்கு சொந்தமான ‘KRI Raden Eddy Martadinata - (REM - 331)’ என்ற யுத்தக்கப்பல் , உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நேற்று (05) காலை நாட்டைவிட்டு புறப்பட்டது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, ‘KRI Raden Eddy Martadinata - (REM - 331)’ என்ற யுத்தக்கப்பலின் தளபதி மற்றும் மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ஆகியோருக்கு இடையில் மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் சிநேகபூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றது.




## கொழும்பு சிற்றூழியர் கசிப்புடன் கைது

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர்களில் ஒருவர், போயா தினமான நேற்று (05) கசிப்பு விற்றுக்கொண்டிருந்த நிலையில், புளத்சிங்கள வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 20 கசிப்பு போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

புளத்சிங்கள மற்றும் மஹரகம ஆகிய வைத்தியசாலைகளில் சிற்றூழியராக பணியாற்றிய இவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிற்றூழியராக தற்போது பணியாற்றுகின்றார்.

58 வயதான சந்தேகநபர், நீண்ட நாள்களாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுள்ளார். பல சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டுள்ளார். பணியின் பின்னரும் விடுமுறை நாள்களிலும் அவர், கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவருகின்றார் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

வீட்டின் நான்கு பக்கங்களிலும் பாதுகாப்பு கமெராக்களை பொருத்தி, மிகவும் பாதுகாப்பான முறையில், திட்டமிட்டு கசிப்பு விற்பனை செய்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

விற்பனைக்குத் தயார் செய்யப்பட்டிருந்த கசிப்பு பக்கெற்றுகள், வீட்டிலுள்ள சுடுநீர் போத்தலுக்குள் மறைத்து வைத்திருந்தார் என்பதுடன், வீட்டுக்கு பின்பக்கத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பு பெரல் ஒன்றும் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில்

# பொருளாதார ஆய்வு மாநாடு

ஆர். ஜெயஸ்ரீராம்

இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி மற்றும் சர்ச்சைகள் என்ற தொனிப்பொருளில், இலங்கை பல்கலைக்கழக பொருளியலாளர்கள் சங்கத்தின் 11ஆவது பொருளியல் ஆய்வு மாநாடு, கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமுலை வளாகத்தில் வெள்ளிக்கிழமை (03) நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவப் பீடத்தின் பொருளியல் துறை, கலை கலாசார பீடத்தின் பொருளியல் கற்கைகள் அலகு, விவசாய பீடத்தின் விவசாய பொருளியல் துறை ஆகிய மூன்று துறைகள் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி எஸ். ஜெயராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம், தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. ரமீஸ் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், இலங்கையில் உள்ள 14 பல்கலைக்கழகங்களின்



பொருளியல் துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை பல்கலைக்கழக பொருளாதார சங்கத்தின் தலைவி கலாநிதி திருமதி ஜெயப்பிரபா சுரேஸ், தேசிய இணைப்பாளர் பேராசிரியர் த. பவன், செயலாளர் கலாநிதி திருமதி திவாகரி கிரிதரன், ஆய்வு மாநாட்டின் செயலாளர் திருமதி சரோஜினி மகேஸ்வரநாதன் ஆகியோரின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆய்வு மாநாட்டின் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பும், இலங்கை பொருளியல் ஆய்வு சஞ்சிகையின் 10ஆவது இதழும் வெளியிட்டு வைக்கப்பட்டன.



சிறப்புப் பேச்சாளராக அமெரிக்கவின் ஜோர்ஜ்ரவுன் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் சாந்தா தேவராஜன் நிகழ்நிலை ஊடாக இணைந்து, இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி தொடர்பாக உரையாற்றினார்.



## சிவில் வலையமைப்பு





அகம் மனிதாபிமான வள நிலையத்தால், வெருகல் பிரதேசத்துக்கான சிவில் வலையமைப்பை உருவாக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (03) நடைபெற்றது. இதன்போது நிறுவனத்தின் பிரதி இணைப்பாளர் அ. மதன் உரையாற்றுவதையும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் கலந்து கொண்ட பிரதேசத்தின் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.



களுமுந்தன்வெளிக் கிராமத்தில்

## பாரம்பரிய நெல்லினங்கள் அறுவடை

வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத் திணைக்கள விரிவாக்கல் பிரிவின் பழுகாமம் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் கீழுள்ள களுமுந்தன்வெளிக் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த பாரம்பரிய நெல் மற்றும் உபஉணவு பயிர் செய்கை அறுவடை விழா, விவசாயப் போதனாசிரியர் பரமேஸ்வரன் சகாப்தனின் ஒழுங்கமைப்பில் வியாழக்கிழமை (02) நடைபெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் ப. பேரின்பராசா, தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல், போரதீவுப் பற்று உதவி பிரதேச செயலாளர் வி. துலாஞ்சன், பாடவிதான உத்தியோகஸ்தர்களான திருமதி லாவன்யா செந்தீபன், என். லஸ்மன், மற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், தொழில் நுட்ப உத்தியோகஸ்த்தர்கள், கிராம சேவை உத்தியோகஸ்த்தர், விவசாயிகள் எனப் பலரும் பலரும் கலந்து கொண்டனர்.

அப்பகுதியில் 120 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டிருந்த பாரம்பரிய நெல்லினங்களான பச்சைப் பெருமாள், மடத்தவழு ஆகியவை இதன்போது அறுவடை செய்யப்பட்டன. சுமார் 25 ஏக்கருக்கு மேல் செய்கை பண்ணப்பட்டிருந்த நிலக்கடலையும் அறுவடை செய்யப்பட்டது.

## கன்னியாவில் ஆண் சிசு மீட்பு



எப். முபாரக்

திருகோணமலை, கன்னியா, சர்தாபுர வீதியோரத்தில், பசளை உறையில், வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டிருந்த நிலையில் ஆண் சிசு நேற்று முன்தினம் (04) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டெடுக்கப்பட்ட சிசுவை, திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகவும் சிசு பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளும்வகையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.



## காத்தான்குடியில் நூல் வெளியீடு

எம்.எஸ்.எம் நூர்தீன்

எம்.ஏ.சி.எம் ஜவஹீர் ஆசிரியர் எழுதிய 'ஈழப் பிரிவினைப் போர் - காத்தான்குடி சமூகத்தின் மீது ஏற்படுத்திய பாதிப்புகளும் கோரிக்கைகளும்' எனும் நூல் வெள்ளிக்கிழமை (03) காத்தான்குடி அல்மனார் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், றைஸ் ஸ்ரீ லங்கா ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு வைபவத்துக்கு றைஸ் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் செயலாளரும் பணிப்பாளருமான சட்டத்தரணி ஏ. உவைஸ் தலைமை வகித்தார்.

வைபவத்தில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களில் செம்மேளனத்தின் தலைவர் ரவூப் ஏ மஜீத், ரைஸ் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் தவிசாளர் முஹம்மத் நவாஸ் உட்பட உலமாக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அக்கரை சுற்றுலா கடற்கரை:

# பிரதேச சபையின் காணியை பிடிக்க கடற்படை முயற்சி

நிதர்சன் வினோத்

எமது மக்களின் காணிகளை விடுவிப்பதாக அரசாங்கம் கூறுகின்ற போதும், காணிகளை அபகரிப்பதிலும் இராணுவமயமாக்கத்தை முன்னெடுத்துச் செல்வதிலும் அரசாங்கம் தீவிரம் காட்டியே வருகின்றது என வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான அக்கரை சுற்றுலா கடற்கரையிலுள்ள காணியை கடற்படையினர் அடையாளப்படுத்துதல் மற்றும் அளவீடு செய்யும் முயற்சியில் ஈடுபட்டமை தொடர்பில் வலி. கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவித்ததாவது;

பிரதேச சபையின் காணியை, கடற்படையினருக்கு தான் வழங்கியுள்ளதாக பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். அவ்வாறாக அறிவிப்புக் கிடைத்தவுடன், குறித்த காணியை அவ்வாறு வழங்க முடியாது என நான் மறுத்திருந்தேன். இந் நிலையில், வெள்ளிக்கிழமை (03) இரகசியமாக பிரதேச சபைக்குச் சொந்தமான சுற்றுலா வலயத்துக்குள் நுழைந்த கடற்படையினர் அளவீடுகளை மேற்கொண்டு புகைப்படங்களையும் எடுத்தனர்.

அடிப்படையில் இந்த நிலம், உள்ளூராட்சி மன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். இந்த நிலம் குறித்து பிரதேச செயலாளர் முடிவுகளை எடுக்க முடியாது. மேலும், மில்லியன் கணக்கில் எம்மால் முதலீடு செய்யப்பட்டுள்ள சுற்றுலா வலயம் ஒன்றை இராணுவ மயப்படுத்த முடியாது என்றார்.




வவுனியாவில்

## வடக்கு – கிழக்கு பேரணிக்கு ஆதரவு

க. அகரன்

தமிழ் மக்கள் மீதான அரசாங்கத்தின் அடக்கு முறைகள், ஆக்கிரமிப்புகள் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வடக்கில் இருந்து கிழக்கு வரையான பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் ஊர்வலம் நேற்று (05) வவுனியாவில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பல்கலைகழக முன்றலில் இருந்து நேற்று முன்தினம் (04) ஆரம்பமாகிய பேரணி, இரணைமடுவில் இருந்து நேற்று (05) முல்லைத்தீவை நோக்கி புறப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சமூக அமைப்புகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஒன்றிணைந்து இந்தப் பேரணியில் பங்குபற்றியிருக்கும் நிலையில், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து ஊர்வலம் ஆரம்பித்து புதிய பஸ் நிலையம் வரை ஊர்வலமாகச் சென்று அங்கிருந்து பஸ்ஸில் பயணித்து பேரணியில் கலந்துகொண்டனர்.

இதன்போது, முன்னாள் வன்னி மாவட்ட எம். பி சிவசக்தி ஆனந்தன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.




முல்லைத்தீவில்

## பரபரப்பை ஏற்படுத்திய பதாகை

செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு நகரில் சுற்றுவட்டம், பொதுச் சந்தை ஆகிய பகுதிகளில் கட்டப்பட்ட இரண்டு பதாகைகள் நேற்று முன்தினம் (04) பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

இலங்கையின் சுதந்திர தினம் கரிநாளாக தமிழர்கள் அனுஸ்டித்துக் கொண்டிருக்கும் போது, இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு வாழ்த்து தெரிவித்து, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனின் படம் பொறிக்கப்பட்ட பதாகைகள் கட்டப்பட்டிருந்தமை பிரதேச மக்களையும் தமிழரசு கட்சியின் தொண்டர்களையும் பெரும் பரபரப்புக்கு உள்ளாக்கியிருந்தது.

சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகரில் நடக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் து.ரவிகரன் கலந்துகொண்டிருக்கும் இந்த நிலையில், இந்தப் பதாகை கட்டப்பட்டிருந்தது.

இது சில விசமிகளின் செயல் எனக்கூறிய தமிழரசு கட்சியின் தொண்டர்கள், குறித்த பதாகையை அகற்றினார்கள்.

மதுபோதையில் வந்த பொலிஸார்

## பாடசாலை மாணவர்கள் மீது தாக்குதல்

சண்முகம் தவசீலன்

தேவிபுரம் பகுதியில், பாடசாலை மாணவர் இருவர் மீது, மதுபோதையில் பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் குறித்து, முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று, மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது; தேவிபுரம் பகுதியில் வியாழக்கிழமை (02) இரவு, நண்பரின் பிறந்த தின கொண்டாட்டத்துக்குச் சென்றுவிட்டு, 300 மீட்டருக்குள் இருந்த தமது வீட்டுக்கு 15 வயதுடைய பாடசாலை மாணவர்கள் இருவர் சென்றுள்ளனர்.

இதன்போது, ஓட்டோவில் வந்த புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தின் மூன்று பொலிஸ் அதிகாரிகள், மாணவர்களை மறித்து, அலைபேசிகளைப் பறித்துவிட்டு, இருவரும் போதைப்பொருள் பாவித்துவிட்டு வருகிறீர்களா எனக் கேட்டு, இருவர் மீதும் தாக்குதல் நடத்தியதாகவும் இதன்போது பொலிஸார் மதுபோதையில் இருந்ததாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் தாக்குதல் மேற்கொண்ட போது, மாணவர்கள் கத்திய சத்தம் கேட்டு பெற்றோர் வந்தபோது, பொலிஸார் குறித்த இடத்தை விட்டு சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் சென்ற பெற்றோர், அங்கு அவர்களுக்கு நீதி கிடைக்காத நிலையில், மாணவர்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதித்தனர். தொடர்ந்து மாணவர்கள் இருவரும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (03) முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இதுவரை நீதியான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் மாறாக, அழுத்தங்களால் வைத்தியசாலையில் இருந்து ஒரு மாணவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு உள்ளதாகவும் மற்றைய மாணவருக்கு எலும்பில் வெடிப்பு ஏற்பட்டு, இன்னும் சிகிச்சையில் உள்ளதாகவும் தமக்கு உரிய தீர்வை பெற்றுத்தருமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.



தரம் 5 புலமை பரிசில் பரீட்சை:

## மாவட்டத்தில் முதல் நிலை

மு. தமிழ்ச்செல்வன்

தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவன் ஜோர்ஜ் பாலசிங்கம் பிறோன்சன் 178 புள்ளிகளை பெற்று, கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் நிலையை பெற்றுள்ளார்.

கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் கிளி /மத்திய ஆரம்ப வித்தியாலத்தில் 137 மாணவர்கள் தோற்றி, 38 மாணவர்கள் சித்தியடைந்தனர். இதில் 70 புள்ளிகளுக்கு மேல் 131 மாணவர்கள் பெற்றுள்ளனர்.



## ஹட்டனில் தேர்த்திருவிழா

ஹட்டன் ஸ்ரீ சிவசுப்ரமணிய ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று (05) காலை ஆரம்பமானது. (ரஞ்சித் ராஜபக்‌ஷ)







## கேகாலையில் சுதந்திர தினம்

கேகாலை மாவட்ட செயலகத்தில் இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டதுடன், இதன் பிரதம அதிதியாக கேகாலை மாவட்ட செயலாளர் ஜே.எம். ஆர்.சி ஜயசிங்க கலந்துகொண்டார். (என். ஆராச்சி)



## இரத்தினபுரியில் சுதந்திர தின நிகழ்வு...

நாட்டின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகள், இரத்தினபுரி மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றன. (சிவாணி ஸ்ரீ)





## சமுர்த்தி வங்கி

மஸ்கெலியா சமுர்த்தி வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு மற்றும் தைப்பொங்கல் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அம்பகமுவ பிரதேச செயலாளர் திருமதி சிதாரா கமகே மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மஹாகும்பாபிஷேகம்



உடபுஸ்ஸலாவ, சென்மாக்றெட் தோட்ட ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான மஹாகும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா வெகு விமரிசையாக நேற்று (05) காலை ஆலய பிரதம குரு குகபிரதிஸ்டாபதி சத்தியோஜாத சிவாச்சாரியார் சிவஸ்ரீ த. தேவேந்திரன் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. (ஆ. ரமேஸ்)

## உக்குவளையில்...



உக்குவளை பிரதேச செயலக வளாகத்தில் இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் கொ ண்டாட ப்பட்டது. (மஹேஸ் கீர்த்திரத்ன)

இந்திய அரசின் 10 ஆயிரம் வீட்டுத்திட்டம்

# வெகுவிரைவில் ஆரம்பம்

### மீண்டும் மீண்டும் சொல்கிறார் அமைச்சர் ஜீவன்



மலையகத்துக்கான இந்திய அரசின் 10 ஆயிரம் வீட்டுத்திட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், கட்சி, தொழிற்சங்க பேதங்களின்றி பயனாளிகளுக்கு உரிய வகையில் வீடுகள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஊவா மாகாணத்திலுள்ள சபைகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலும், தேர்தல் பிரசார ஆரம்பக்கூட்டமும் பண்டாரவளை மாநகர சபை மண்டபத்தில் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (05) நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சவாலை எதிர்கொள்ள வேண்டுமெனில் களத்தில் இறங்கியாக வேண்டும். நெருக்கடியை கண்டு பின்வாங்கி நிற்பது ஏற்புடையதல்ல. அதனால்தான் நெருக்கடியான சூழ்நிலையில் அமைச்சு பதவியை ஏற்றேன். மாறாக, பதவி ஆசையில் அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

“மக்களுக்கு சேவை செய்யவே நான் அரசியலுக்கு வந்துள்ளேன். எனவே, மாலை, பொன்னாடைகள் வேண்டாமென ஏற்கெனவே கூறியுள்ளேன். ஆகவே, எனக்காக கொண்டுவந்த மாலைகளை அப்படியே கோவிலுக்கு கொண்டு சென்று சாமிக்கு அணிவித்து ஆசிபெறுங்கள். எமது தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் தோளோடு தோள் நின்று பதுளையில் சேவல் கொடியை ஏற்றிய அனைத்து சொந்தங்களுக்கும் நன்றி.

நெருக்கடியான கட்டங்களில் பதுளை மாவட்டமும் காங்கிரஸை தோளில் சுமந்துள்ளது. அந்த மண்ணை மறக்கமாட்டோம். தேர்தல் பிரசாரத்தை, எவரையும் கொச்சைப்படுத்தும் வகையில் முன்னெடுக்காமல், நாகரிகமாக முன்னெடுங்கள் என்றார்.

## மூவர் மட்டும் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டம்




■ மொஹொமட் ஆஸிக்

மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து பிரிந்த குமார் குணரட்னம் தலைமையிலான பிரிவான சோசலிச முன்னணியின் (பெரட்டுகாமி சோசலிசக் கட்சி) ஆ தரவாளர்கள், மடவளை நகரில் சனிக்கிழமை (04) மாலை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

பொருட்கள் விலையேற்றம், மின்வெட்டு, மின்சார கட்டண உயர்வு, புதிய வரி விதிப்பு போன்ற பல்வேறு விடயங்களை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மூவர் மாத்திரமே கலந்துகொ ண்டிருந்தனர்.

## நில்தண்டாஹின்ன நகரில் மரக்கன்று நடுகை



■ எஸ். கே. குமார்

75ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தை முன்னிட்டு, தேசிய இளைஞர் சேவை மன்றம், வலப்பனை பிரதேச செயலகம் ஆகியன இணைந்து வலப்பனை இளைஞர் சமூக பிரதேச சம்மேளனம் நில்தண்டாஹின்ன நகரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்வையும் மரக்கன்று நடுகையையும் முன்னெடுத்தது.

வலப்பனை பிரதேச செயலாளர் ஷாலிகா லிந்தகும்புர தலைமையில் இதன் ஆரம்ப நிகழ்வு, வலப்பனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றதுடன் அதன் பின்னர் நில்தண்டாஹின்ன நகரில் சிரமதான நடவடிக்கையும் ஆரம்பமானது.

இதன்போது விழிப்புணர்வு காட்சி பலகைகள் அமைக்கப்பட்டதுடன், நகர் முழுவதும் சிரமதானம் செய்யப்பட்டு, மர நடுகையும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆதரவும் கிடைத்துள்ளமை விசேட அம்சமாகும்.

## ஹட்டனில் தேங்காயின் விலை அதிகரித்தது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரில் தேங்காயின் விலை கணிசமாக அதிகரித்துள்ளதென நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, ஹட்டனில் தேங்காயொன்று 100 தொடக்கம் 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் சிறிய தேங்காய் 80 தொடக்கம் 90 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன் நகர தேங்காய் விற்பனையாளர்கள், தற்போது தேங்காயின் மொத்த விலை அதிகரித்துள்ளதால் தேங்காயின் சில்லறை விற்பனை விலை அதிகரித்துள்ளது.

இதனால் நுகர்வோரைப் போலவே தாமும் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.




மடவளை அல் முனவ்வரா ஆரம்பப் பாடசாலையில்

## 25 மாணவர்கள் சித்தி

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி, வத்துகாமம் கல்வி வலயத்தின் மடவளை -அல் முனவ்வரா ஆரம்பப் பாடசாலையிலிருந்து இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் 25 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இம்மாணவர்கள், மடவளை பஸார் வை.எம். எம். அமைப்பால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

# வடக்கில் அடத்தாக கைப்பற்றிய காணிகளை கிள்ளிக்கொடுக்கும் கைங்கரியம்

இலங்கை திருநாட்டின் சுதந்திரமானது, பெப்ரவரி 4ஆம் திகதியுடன் பவளவிழா கண்டது. அதைக் கொண்டாடும் வகையிலான தேசிய வைபவம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் காலி முகத்திடலில் நடைபெற்றது. பிரதேச செயலகங்களின் மட்டங்களில் தேசிய கொடி ஏற்றப்பட்டு கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன.

சுதந்திர தினத்தன்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுகளுக்கு அப்பால், மரநடுகைகள்,கலாசார நிகழ்வுகள், சிரமதானங்கள், விளையாட்டுப் போட்டிகள் ஆங்காங்கே நடத்தப்பட்டன. பல பாடசாலைகளில் நிகழ்ச்சிகளும் சித்திரம் வரைதல் போட்டிகளும் நடத்தப்பட்டன.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களில் ஒன்றான சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குதலின் கீழ்,கைதிகள் 662 பேர் விடுவிக்கப்பட்டனர். இவர்கள், சிறிய குற்றங்களுக்காக சிறைக்குச் சென்று தண்டம் செலுத்த முடியாதவர்களாவர். தமிழ் அரசியல் கைதிகள் எவரும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவில்லை என்பது வருந்ததக்கதாகும்.

யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் படையினர் மற்றும் அரசாங்கத்தால் அடத்தாக கைப்பற்றப்பட்ட பொதுமக்களின் காணிகளில், 108 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. காணிகள் விடுவிக்கப்படுவதற்கு தென்னிலங்கையில் எதிர்ப்புகள் கிளம்பியிருந்தாலும், அரசாங்கத்தின் துணிவை பாராட்டவே வேண்டும்.

இதற்கிடையே, 75ஆவது சுதந்திர தினம் அன்றும் அதற்கு முதல்நாளும், சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறு முன்னெடுக்கப்பட்ட மருதானை ஆர்ப்பாட்டத்தின் மீது, பொலிஸாரும் படையினரும் கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடத்தியிருந்தனர். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சுதந்திர தின செலவு தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், சுதந்திர தினத்துக்கு ஆதரவாகவும் பேரணிகள் நடத்தப்பட்டன. பொதுவாக பார்க்குமிடத்து, கடந்த காலங்களைப் போல, வீடுகளிலும் வாகனங்களிலும் தேசிய கொடிகள் பறக்கவிடப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதனிடையே, பெப்ரவரி நான்காம் திகதியை கரிநாளாக பிரகடனப்படுத்தியும் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியை வழங்குமாறு கோரியும் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

பொலிஸாரின் பல்வேறு தடைகளையும் மீறி முன்னகரும் பேரணி, எதிர்வரும் ஏழாம் திகதி மட்டக்களப்பை சென்றடைய உள்ளது. ‘தமிழருக்கு இருள் நாள்’ எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு, கல்லடி பாலத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டமொன்றும் நடத்தப்பட்டது.

அடத்தாக பிடிக்கப்பட்ட மக்களின் காணிகளை விடுவிக்கும் போது, அந்தந்த அரசாங்கங்கள் மக்கள் மனங்களில் இடம்பிடித்துக் கொள்கின்றன. எனினும், வடக்கு, கிழக்கில் காணிப் பிரச்சினைக்கு முழுமையாக தீர்வு கிடைக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். காணி உரிமைக்கான கோஷங்கள் இன்னும் எழுப்பப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

அடத்தாகக் கைப்பற்றிய சிறுபான்மையின காணிகளை கிள்ளிக்கிள்ளி கொடுக்காது, காணிப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வை காண்பதற்கு வழிசமைக்கவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களில், தெருக்களில் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ, உள்ளூராட்சி மன்றங்களோஅல்லதுபொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும், வெற்றிலையை வாயில் குதப்பியவாறு, அதை பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள் மனச்சாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக, பஸ் தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அருவருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள்.

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பனமான விடயமாகி விட்டது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சிறுகடல் பகுதிக்கான பாதை

## சீரின்மையால் தொழிலாளர்கள் பெரும் சிரமம்



கிளிநொச்சி, புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம் சிறுகடல் பகுதிக்கான பாதை சீரின்மையால், பருவகாலத் தொழிலை மேற்கொண்டு வரும் தொழிலாளர்கள், பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர். கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம் சிறுகடல் பகுதிகளில் தற்போது பருவகால இறால் தொழில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், புளியம்பொக்கணை, நாகதம்பிரான் கோவில் சந்தியிலிருந்து கடற்கரை வரைக்குமான சுமார் மூன்று கிலோ மீற்றர் வரையான வீதி, இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன், சைக்கிளில் கூட பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இவ்வாறு குறித்த வீதி சேதமடைந்து சேறும் சகதியுமாகக் காணப்படுவதால், அன்றாடம் தொழிலுக்குச் செல்லும் சிறு கடல் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, சிறு கடல் தொழிலை மேற்கொள்ளும் மாற்றுத்திறனாளிகள், முதியோர் எனப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு, 10 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக கோரிய போதும், இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டி உள்ளனர்.

யது பாஸ்கரன்

### சில சிந்தனைகள்:

# ‘சுதந்திரம்’ கிடைத்து 75 ஆண்டுகள்!



என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

இலங்கையானது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலையடைந்து, பிரித்தானிய முடியின் கீழ் டொமினியனாக ஆன, 1948 பெப்ரவரி நான்காம் திகதியை இலங்கை, சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகிறது. அந்தச் ‘சுதந்திரம்’ கிடைத்து, கடந்த சனிக்கிழமையோடு 75 ஆண்டுகளாகியது.

75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதா, வேண்டாமா என்ற வாதப்பிரதிவாதங்கள் இந்தமுறை மிகப் பலமாக ஒலித்தன. சுதந்திர தினத்துக்கு முதல் நாளிரவு, கொழும்பின் மருதானையில் சத்தியாக்கிரக ஆர்ப்பாட்டம் இடதுசாரிகளால் நடத்தப்பட்டது. அந்தப் போராட்டத்தை பொலிஸார் தண்ணீர் பீய்ச்சியடித்தும், கண்ணீர் புகைக்குண்டுகள் வீசியும் கலைத்திருந்தனர்.

மறுபுறத்தில், 75ஆவது சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு, கடைகள் அடைக்கப்பட்டன. தமிழரசுக் கட்சியினர், சுதந்திர தினத்தை ‘கரிநாள்’ என்று அறிவித்ததுடன், வடக்கிலிருந்து, கிழக்குக்கு எதிர்ப்புப் பேரணியையும் தொடங்கினர்.

75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று சொன்ன ஜனாதிபதி ரணில், 13ஆவது திருத்தத்தை முற்றாக அமல்படுத்துவேன் என்று கடந்த சர்வகட்சி மாநாட்டில் சொன்னதோடு சரி! சுதந்திர தினத்தன்று காலையில் நடந்த விழாவில் உரையாற்றாத ஜனாதிபதி ரணில், மாலையில் நாட்டுக்காக ஆற்றிய உரையில், “இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில், இந்த ஆண்டின் சவால்களை மேலும் பொறுமையுடனும் துணிச்சலுடனும் எதிர்கொள்ள நாம் அனைவரும் தீர்மானிப்போம்” என்று சொல்லி, தனது சிற்றுரையை நிறைவு செய்திருந்தார்.

இவையெல்லாம் இன்ன பல பிற சிந்தனைகளைத் தூண்டுவதாக இருந்தன. அவற்றில் சிலதைப் பதிவு செய்வது உசிதம்.

### 75ஆவது சுதந்திர தினமும் எதிர்ப்பும்

சுதந்திர தினத்தில் கொண்டாடுவதற்கு எதுவுமில்லை என்று, அதைப் பெரும்பாலும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் புறக்கணித்து வந்துள்ளனர். தமக்கான அரசியல் உரிமைகள் மறுக்கப்படும் நாடொன்றில், தமக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது என்பதுதான், அவர்கள் முன்வைக்கும் கேள்வி. அதில் நியாயம் இல்லாமல் இல்லை.

தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக எத்தனை துன்பங்களை, பாரபட்சங்களை, இழப்புகளை இந்நாட்டின் தமிழர்கள் சந்தித்திருக்கிறார்கள். இரண்டாந்தரப் பிரஜைகளாக தமிழர்கள் நடத்தப்பட்டமை, இந்நாட்டின் இருண்ட வரலாறு. அப்படியானால், அவர்களைப் பொறுத்தமட்டில் சுதந்திர தினம் என்பது அர்த்தமற்றது என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் விசித்திரமானவர்கள். இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, சுதந்திர தினத்தில் கலந்துகொண்டு, சுதந்திர தினத்தை ‘கரிநாள்’ என்று சொன்ன தமிழ்த் தேசியவாதிகளை “மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்” என்று பகிரங்கமாகவே சொன்ன தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இன்று அதே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் போது, சுதந்திர தினத்தை “கரிநாள்” என்று பகிரங்கமாகச் சொல்கிறார்.

அன்று, அரச சுதந்திர தினத்தில் அமர்ந்திருந்தவர், இன்று வடக்கிலிருந்து, கிழக்குக்கு எதிர்ப்புப் பேரணி நடத்துகிறார். அதில், இலங்கைக்கு எந்தச் சம்பந்தமும் இல்லாத நேருவின் குல்லாத் தொப்பியை அணிந்து கொண்டு நிற்கிறார். அவரும் அரசியல்வாதிதானே!

“அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா” என்று இதையும் தமிழ் மக்கள் கடந்துவிடலாம். அடுத்த தேர்தலில் வெல்ல வேண்டுமென்றால், தமிழ் மக்களின் உணர்ச்சியை வைத்து, அரசியல் செய்தால்தான் முடியும் என்ற தமிழரசுக் கட்சியின் அரசியலை, சுமந்திரனும் மெல்ல மெல்லக் கற்றுக்கொண்டுவிட்டார் போலும்! தேர்தல் அரசியல் மட்டும் இல்லையென்றால், தமிழ்த் தேசியம் என்றோ குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கும். நிற்க!

மறுபுறத்தில், சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு எதிராக பெரும்பான்மையின மக்களிடம் எழுந்திருக்கிற எதிர்ப்பு என்பது புதுமையானது. இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், இந்த எதிர்ப்பு என்பது, சுதந்திர தினத்துக்கு எதிரான எழுச்சியல்ல; பணம் செலவழித்து, அதைக் கொண்டாடுவதற்கு எதிரான எழுச்சி ஆகும்.

அதாவது, நாடு பொருளாதார பிறழ்வில் சிக்கிச் சின்னாபின்னமாகிப் போயிருக்கும் இந்த நிலைமையில், கொண்டாட்டம் வேண்டுமா என்பதுதான் இந்த எதிர்ப்பின் வரையறை. தமக்கான அரசியல் அலைக்குப் பலம் சேர்க்க, இடதுசாரிகள் இதை இலாவகமாகப் பற்றிக்கொண்டு, ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதில், தமது கொள்கை என்ன, நிலைப்பாடு என்ன என எந்தத் தெளிவுமே இல்லாமல், எப்படியாவது தேர்தலில் வென்றுவிட வேண்டுமென மட்டும் பயணித்துக் கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியும் கைகோர்த்திருக்கிறது. இந்த எதிர்ப்புகள் அர்த்தமற்றவை. கடனெடுத்து குடும்பம் நடத்தும் அப்பாவின் பொக்கட்டுக்குள் இருந்து காசை எடுத்து, படம் பார்க்கும் மகனின் மீது, அம்மா காட்டும் கோபத்தை போன்றது இது. இதில் நிறைய உணர்ச்சிவசப்பாடுகள் இருக்கின்றனவேயன்றி, அரசியல் ரீதியான முக்கியத்துவம் எதுவும் கிடையாது.

இவர்களுடைய எதிர்ப்பும் தமிழர்களுடைய எதிர்ப்பும் ஒன்றல்ல. வருடாவருடம் தம்முடைய சகோதரர்களையே கொன்றொழித்த யுத்த வெற்றியை, சுதந்திர தினத்தை விடப் பெரிதாகக் கொண்டாடும் போது, சேர்ந்து கொண்டாடியவர்கள்தான் இவர்கள். இன்று அதிகரித்த வாழ்க்கைச் செலவு, வருமானத்தைக் குறைத்த வருமான வரி என, மக்கள் பணத்தைச் செலவழிப்பதைப் பற்றி பெரும் பிரக்ஞையோடு இருப்பதால், சுதந்திர தினத்துக்கு 200 மில்லியன் செலவா எனத் தம்மை நல்லவர்களாகக் காட்டிக்கொள்ள நாடகம் நடத்துகிறார்கள்.

இலங்கையில், பொதுமக்கள் பணம் அதிகம் வீணாவது, அரசு சொந்தமாக நடத்தும் நிறுவனங்களால்த்தான்; இதை மாற்ற இவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அரச துறை என்பது, இங்கு ஓட்டைப்பானை; ஆனால் அதை எதிர்க்கமாட்டார்கள். 15 இலட்சம் அரச ஊழியர்களினதும் அவர்களது குடும்பத்தினரதும் வாக்குகள் தேவையல்லவா?

அதுபோல, இலங்கையின் பணம் வீணாகும் இன்னொரு வழி, இலங்கையின் பெருத்த இராணுவம். அதைக் குறைப்பது பற்றியும், இலங்கையின் மிக உயர்ந்த பாதுகாப்பு செலவுகளைக் குறைப்பது பற்றியெல்லாம் பேசமாட்டார்கள். அங்கே பல்லாயிரம் கோடிகள் வீணாகிக் கொண்டிருக்க, இங்கே 20 கோடிக்கு நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். இதுதான் உண்மை; இதுதான் யதார்த்தம்.

### இனப்பிரச்சினைக்கான தீர்வு

தமிழர் தரப்பு சமஷ்டி கோருகிறது. ஏன் சமஷ்டி? என்ன வகையான சமஷ்டி? எத்தகைய அதிகாரப் பகிர்வு என, எந்த விளக்கத்தையும் அவர்கள் அளிப்பது இல்லை. மறுபுறத்தில், “பாராளுமன்றம் 13ஆம் திருத்தத்தை இல்லாதொழிக்கும் வரை, நான் அதை முழுமையாக அமல்படுத்துவேன்” என்று ஜனாதிபதி சொன்னதற்கே, இனவாதத்தில் ஊறி அழுகிப்போன இனவாதிகளான சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்றவர்கள் கடும் எதிர்ப்பை முன்வைத்திருக்கிறார்கள்.

மறுபுறத்தில், பௌத்த மகாநாயக்க தேரர்கள் 13ஐ அமல்படுத்தக்கூடாது என ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். 13 வேண்டாம் என்பதில், தமிழ்த் தேசியவாதிகளும் சிங்கள-பௌத்த தேசியவாதிகளும் தெளிவாக இருக்கிறார்கள். ஆனால், ஏற்கெனவே அரசியலமைப்பிலுள்ள 13ஐயே முழுமையாக அமல்படுத்த இடமளியாத ‘சிங்கள-பௌத்த’ தேசியவாதிகள், சமஷ்டியை எப்படி அனுமதிப்பாரென்ற வேதாளத்தின் கேள்விக்கு, தமிழ் அரசியல்வாதிகளிடம் பதில் இருக்கிறதா என்பதுதான் இங்கு புரியாத புதிர். ஆங்கிலத்தின் இதை ‘gridlock situation’ என்ற சொல்லலாம். ‘திறக்கமுடியாத பூட்டின் நிலை போன்றதாகும். இதற்குள்தான் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வும் சிக்கி நிற்கிறது.

சமஷ்டி, ஒற்றையாட்சி என்ற இரு எல்லைகளைத் தவிர்த்து யோசிக்க, இருதரப்பும் தயாராகவில்லை. பாவம் ஜனாதிபதி ரணில், இதற்கு நடுவில் தனியாளாக சிக்கிப் போயிருக்கிறார். அவருக்கும் அடுத்த ஜனாதிபதி தேர்தலைப் பற்றிய கவலைகள் நிச்சயமாக இருக்கும். ஆகவே, சிங்கள-பௌத்த தேசியவாதிகளின் எதிர்ப்பை மீறி, அவர் 13ஐ அமல்படுத்துவாரா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி. அப்படி அவர் செய்தால், சுதந்திர இலங்கையின் வரலாற்றில், முதுகெலும்பு உள்ள ஒரே அரச தலைவராக, அவரை அடையாளப்படுத்தலாம்.

மறுபுறத்தில், தமிழ் அரசியல்வாதிகள் என்ன செய்யப்போகிறார்கள்? கிடைக்காத சமஷ்டிக்காக இன்னும் எத்தனை தசாப்தங்களைத் தாரைவார்க்கப் போகிறார்கள்? விரும்பியது கிடைக்கும் வரை, கிடைத்ததை வைத்து செய்யக்கூடியவனவற்றையேனும் செய்யும் இயல்போ, இயலுமையோ இவர்களிடம் இல்லை என்பதற்கு, வடமாகாண சபையை இவர்கள் நடத்திய இலட்சணமே சாட்சி.

எங்களிடம் அதிகாரங்கள் இருந்தால், எப்படியெல்லாம் சாதித்திருப்போம் என்று சொல்வது தலைமைத்துவமில்லை. உண்மையான தலைவர்கள், தங்களுக்கு சகல அதிகாரங்களும் கிடைக்கும் வரை காத்திருப்பதில்லை. அவர்கள் ஒவ்வோர் அடியிலும் வாய்ப்புகளைத் தேடுகிறார்கள். அதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள். ஒவ்வொரு படிக்கட்டாகக் கட்டி, தன்னையும் தனது சமூகத்தையும் முன்னேற்றுகிறார்கள். அத்தகைய தலைவர்களை தமிழினம் இனியாவது அடையாளம்காண வேண்டும்.

சுதந்திர இலங்கையின் 75ஆவது வயதில், அதைப் பற்றிச் சொல்ல ஒன்றேயொன்றுதான் இருக்கிறது. இனியாவது இந்தத் தீவிலுள்ள அனைவருக்குமான ஒரு நாட்டை, இங்கு கட்டியெழுப்பத் தொடங்க வேண்டும். அப்போதுதான், ‘சுதந்திர தினம்’ அனைவருக்குமே அர்த்தபூர்வமானதாக இருக்கும்.

### நிபுணர்களின் திறனை மேம்படுத்தும் நெஸ்லே லங்காவின் நடவடிக்கைகளுக்கு

# SHMA ஆதரவு

உலகின் பழைமையான மற்றும் முதல் ஹோட்டல் முகாமைத்துவ பல்கலைக்கழகமான *University □cole h□teli□re de Lausanne* இன் EHL நிபுணத்துவ டிப்ளோமா கற்கையினூடாக தொழிற்பயிற்சியை (VET) வழங்குவதற்காக ஏ பவர் அன்ட் கம்பனி பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிலல் நிலையமான சுவிஸ் ஹோட்டல் மனேஜ்மன்ட் அகடமி (SHMA), நெஸ்லே லங்கா பிஎல்சியுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. துறையின் வளர்ந்து வரும் இளம் வயதினரின் திறன்களை மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்கும் நடவடிக்கைகளுக்கமைய இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது.




இந்த உடன்படிக்கை பவர் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் ப்லாசர் மற்றும் நெஸ்லே லங்கா பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளரான ஜேசன் அவன்சினா ஆகியோரிடையே அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் பவர் மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனங்களின் அதிகாரிகளும் பங்கேற்றிருந்ததுடன், இலங்கை சமையல்கலை நிபுணர்கள் குழாம் மற்றும் இலங்கை விருந்தோம்பல் பட்டதாரிகள் சம்மேளனம் (SLHGA) ஆகியவற்றின் சிரேஷ்ட பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

உலகின் மாபெரும் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பு நிறுவனமாக திகழ்வதுடன், இலங்கையில் 115 வருடங்களுக்கு மேலாக, ஆரோக்கியமான குடும்பங்களை பேணுவதற்காக ஒப்பற்ற அர்ப்பணிப்பையும் பங்களிப்பையும் வழங்கி வருவதுடன், தொழிற்துறையைச் சேர்ந்த EHL நிபுணத்துவ டிப்ளோமா தொழிற்பயிற்சி பங்குபற்றுநர்களுக்கு தமது திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும், சிறந்த விருந்தோம்பல் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கான தகைமைகளை வழங்குவதிலும் முழு அனுசரணையை வழங்கி பங்களிப்பு வழங்க முன்வந்திருந்தது.

இந்த தனியார் துறை ஒன்றிணைவின் பிரதான எதிர்பார்ப்பானது, EHL நிபுணத்துவ டிப்ளோமா தொழிற்பயிற்சியினூடாக உலகத் தரமான கல்வியை பலருக்கு வழங்கி, அவர்களின் அனுபவத்தை மேலும் கட்டியெழுப்புவதாகும். இந்தக் கற்கையில் பதிவு செய்து கொண்டு இணைத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்களுக்கு ஜனவரி 9 ஆம் திகதி புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. டிப்ளோமா கற்கைகளை SHMA ஐச் சேர்ந்த EHL சான்றளிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்களாலும், துறைசார் அனுபவமிக்க நிபுணர்களாலும் முன்னெடுக்கப்படும்.

ப்லாசர் கருத்துத் தெரிவிக்கையில், “நெஸ்லே லங்காவுடனான இந்தப் பங்காண்மை தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். உலகின் முன்னணி விருந்தோம்பல் கற்கைகளை வழங்குநருடன் இணைந்து, நாட்டின் துறைசார்ந்தவர்களின் அறிவையும் திறனையும் கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்க முடிந்துள்ளது. எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பல கைகோர்ப்புகளின் முதல் கட்டமாக இது அமைந்திருப்பதுடன், எமது பரந்த மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த விருந்தோம்பல் நியமங்களை உலகுக்கு வெளிக்காட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள இவ்வாறான திட்டங்களில் அங்கம் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.” என்றார்.

பங்குபற்றுநர்களின் முன்னைய துறைசார் அனுபவங்கள் மற்றும் திறன்களின் அடிப்படையில் அடிப்படை மட்ட கற்கையில் பங்கேற்பதிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், உயர் டிப்ளோமா கற்கையை தொடர்ந்து, இடைப்பட்ட நிலைக்கு நேரடியாக இணைந்து கொள்வதற்கு உதவியிருந்ததுடன், தற்போதைய பணியிடத்தில் அவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படுவதுடன், அதனை SHMA கண்காணித்து மதிப்பாய்வுகளை மேற்கொள்ளும்.

இந்தத் தொழிற்பயிற்சியில் வாராந்தம் 1 நாள் பிரயோக மற்றும் கோட்பாட்டு அடிப்படையிலான பயிலல் மேற்கொள்ளப்படுவதுடன், பரிபூரணமான 5 நாள் தொழில்நிலை பயிற்சி அடங்கியிருக்கும். EHL நிபுணத்துவ டிப்ளோமா தொழிற்பயிற்சியினூடாக தொழில்சார் பயிற்சி மாதிரியை இலங்கையில் வழங்கும் முதலாவது விருந்தோம்பல் முகாமைத்துவ கல்வியகமாக SHMA அமைந்துள்ளது. இதற்காக பல பங்காளர் ஹோட்டல்களுடன் கைகோர்த்துள்ளதுடன், மேலும் ஹோட்டல்களை இணைத்துக் கொள்ளவும் எதிர்பார்க்கின்றது.

உலகின் முதல்தார விருந்தோம்பல் முகாமைத்துவ பல்கலைகழங்களில் ஒன்றாக EHL அமைந்திருப்பதுடன், அண்மையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்களில் 96 சதவீதமானவர்களுக்கு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள முடிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. உலகின் சிறந்த கல்வி மாதிரிகளில் ஒன்றான, சுவிஸ் நாட்டின் திறன் ஆளுமைக் கட்டமைப்பின் பிரகாரம் கற்கைகள் அமைந்துள்ளன. SHMA இனால் தனது நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) திட்டத்தினூடாக இலங்கையில் RIESCO நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அபிவிருத்தி மற்றும் ஒன்றிணைவுக்கான சுவிஸ் முகவர் நிறுவனத்துடன் (SDC), SHMA தனியார் மற்றும் பொதுத் துறைசார் பங்காண்மையை அண்மையில் ஏற்படுத்தியிருந்தது.

SSG முன்னெடுப்பினூடாக, இலங்கையின் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கப்படுவதுடன், திறன்கள் இடைவெளியைக் குறைத்து, பல்வேறு செயற்பாடுகளினூடாக வெற்றியை எய்துவதற்கு தரமான கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கும், பெண்களின் பங்கேற்பை அதிகரிக்கச் செய்வதுடன், திறன் படைத்த குழுவைக் கட்டியெழுப்பி, சர்வதேச நியமங்களின் பிரகாரம் தர நியமங்களை மேம்படுத்துவதற்கும், சிறந்த சுற்றுலா அமைவிடங்களில் ஒன்றாக இலங்கையைத் திகழச் செய்வதிலும் பங்களிப்பு வழங்கும். அரசாங்கத்தின் மீது காணப்படும் அழுத்தங்களை குறைப்பதில் இது உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், தொழிற்துறைக்கு மாத்திரம் பங்களிப்பு வழங்காது, நற்பெயருக்கும், பொருளாதாரத்திலும் பங்களிப்பு வழங்கும்.

### யூனியன் அஷ்யூரன்ஸ் ஊழியர்களுக்கான

# வருட இறுதி கொண்டாட்ட நிகழ்வு

யூனியன் அஷ்யூரன்ஸின் ஊழியர்களுக்கான வருட இறுதி கொண்டாட்ட நிகழ்வு *Shine Like a Diamond* எனும் தலைப்பில் அண்மையில் கொழும்பு BMICH இல் இடம்பெற்றது. இந்நிகழ்வில், யூனியன் அஷ்யூரன்ஸ் குடும்பத்தார் அனைவரும் கலந்து கொண்டு, மனம் மறவாத இனிய மாலைப் பொழுதை அனுபவித்திருந்தனர்.




கடந்த ஆண்டுகளில் யூனியன் அஷ்யூரன்ஸ் ஊழியர்களின் சிறந்த செயற்பாடுகளை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் பாராட்டியிருந்ததுடன், அதற்காக இந்நிகழ்வுக்கு ‘*Shine Like a Diamond*’ எனும் நாமமும் சூட்டப்பட்டிருந்தது. சவால்கள் நிறைந்த ஆண்டில் இயங்கிய போதிலும் அணியினரால் சிறந்த வினைத்திறன் வெளிப்படுத்தப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில், “எமது சம்பியன்களால் யூனியன் அஷ்யூரன்ஸ் கீர்த்தி நாமம் உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தில் பல குறிப்பிடப்பட வேண்டிய சாதனைகளை பதிவு செய்துள்ளனர். அவர்களின் வினைத்திறனான செயற்பாடுகள் தொடர்பில் நான் மிகவும் பெருமை கொள்கின்றேன்.” என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் அனீஃவ் கருத்துத் தெரிவிக்கையில், “அதன் பிரத்தியேகமான அம்சங்களின் காரணமாக, நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பெறுமதியை மேலும் அதிகரிக்கச் செய்யும் வகையில் இந்த வருடாந்த கொண்டாட்ட நிகழ்வு அமைந்துள்ளது. கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் பல வேளைகளில் இருப்பிடத்திலிருந்து பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதால் நீண்ட இடைவேளைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததால், இந்த நிகழ்வு விசேடமானதாக அமைந்திருந்தது.” என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், “யூனியன் அஷ்யூரன்ஸ் வெற்றியீட்டும் நிறுவனமாகும். நிறுவனத்தின் ஊழியர்கள் கொண்டிருக்கும் முழுத் திறனை அவர்களால் உணரக்கூடியதாக இருக்கும். நிறுவனம் தனது ஊழியர்களை பெறுமதியாக நடத்துவதுடன், பல்வேறு வழிகளில் வெகுமதியளிக்கின்றது. பயிலல் மற்றும் தம்மை விருத்தி செய்து கொள்வதற்கு அவர்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்குவதாக அமைந்துள்ளது. நேர்த்தியான பணி-வாழ்க்கை சமநிலைக்காக, ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கம் போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது.” என்றார்.

25 வருடங்களாக நிறுவனத்தில் நீண்ட கால சேவைகளை வழங்கும் 26 ஊழியர்களை கௌரவிக்கப்பட்டிருந்தமை இந்த நிகழ்வின் பிரதான அங்கமாக அமைந்திருந்தது. இதனூடாக நிறுவனம் தனது ஊழியர்களுடன் உறுதியான பிணைப்பையும், ஒன்றிணைவையும் மற்றும் நோக்கத்தையும் பகிர்ந்துள்ளது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நெருக்கடியான காலப்பகுதியில் ஊழியர்கள் ஆற்றியிருந்த பங்களிப்புக்காக இந்த மாலைப் பொழுது சிறந்த இசை நிகழ்வுகளுடன் களிப்பூட்டும் செயற்பாடுகளைக் கொண்டு மகிழ்விக்கும் வகையில் அமைந்திருந்தது.

சென்னை

# கூட்டநெரிசலில் சிக்கி 4 பெண்கள் உயிரிழப்பு

### குடும்பத்துக்கு தலா ரூ.2 இலட்சம் நிதியுதவி

கூட்டநெரிசலில் சிக்கி உயிரிழந்த 4 பெண்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 2 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்குமாறு முதல்வர் மு.க .ஸ்டாலின் பணித்துள்ளார்.



தைப்பூசத் திருவிழாவையொட்டி அங்குள்ள பொதுமக்களுக்கு வேட்டி சேலை இலவசமாக sவழங்குவதற்காக, வாணியம்பாடி காய்கறி சந்தைக்கு அருகில் சனிக்கிழமை (04) டோக்கன் விநியோகிக்கப்பட்டது.

அதை வாங்குவதற்காக ஏராளமான பொதுமக்கள் கூடியதால், அங்கு கூட்டநெரிசல் ஏற்பட்டது. இந்த கூட்டநெரிசலில் சிக்கி மரணமடைந்தனர். இந்த மரணங்களுக்கு காரணமான அய்யப்பன் உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

லக்னோ

# நிர்வாணமாக கதவை தட்டும் பெண்

உத்தரப் பிரதேசத்தின் ராம்பூர் மாவட்டத்தில் உள்ள தெருக்களில் அடையாளம் தெரியாத பெண்ணொருவர் ஆடையின்றி நிர்வாணமாக சுற்றித்திரியும் அதிர்ச்சி வீடியோ வைரலாகி வருகிறது.

அந்த நிர்வாண பெண்ணின் சிசிடிவி வீடியோ வைரலாகி, வாட்ஸ்அப் மற்றும் சமூக வலைதளங்களில் பரவலாக பகிரப்பட்டாலும், பொலிஸார் இன்னும் அந்த பெண்ணைக் கண்டுபிடிக்கவில்லை.

புகார் அளித்த உள்ளூர்வாசி கூறுகையில், அந்தப் பெண்ணுக்கு சுமார் 25 வயது இருக்கும் என்றும், புகார்தாரரின் வீட்டு வாசலில் இருந்து வெளியேறியபோது, அந்தப் பெண்ணை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் சிலர் பின்தொடர்ந்ததாகவும் அவர் கூறினார்.

இதுகுறித்து விசாரணைகளை முன்னெடுக்கும் ராம்பூர் பொலிஸார், அந்த பெண்ணின் நோக்கத்தை தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை என்றனர்.



இந்தியா

# காற்றில் கலந்தார் ‘கான சரஸ்வதி’ வாணி ஜெயராம்

“வாணி ஜெயராம் தனது இனிமையான குரலால் நினைவுகூரப்படுவார்” என பிரதமர் மோடி புகழஞ்சலி இரங்கல் தெரிவித்துள்ளார்.

“திறமையான வாணி ஜெய்ராம் ஜி, பல்வேறு மொழிகளை உள்ளடக்கிய மற்றும் பல்வேறு உணர்வுகளை பிரதிபலிக்கும் அவரது இனிமையான குரலால் நினைவுகூரப்படுவார். அவரது மறைவு படைப்புலகிற்கு பெரும் இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கும் ரசிகர்களுக்கும் இரங்கல்கள்” என தெரிவித்துள்ளார்.

பிரபல பின்னணி பாடகர் வாணி ஜெயராம் சென்னையில் உள்ள அவரது வீட்டில் சனிக்கிழமை காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 78. அவருக்கு பத்ம பூஷண் விருது அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. கட்டிலில் இருந்து கீழே தவறிவிழுந்து, தலையில் காயம் ஏற்பட்டிருந்த நிலையிலேயே அவர் மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





செங்கல்பட்டு

# காத்திருந்த பெண்ணை கடத்தி கூட்டு பாலியல் வன்கொடுமை

செங்கல்பட்டு ரயில் நிலையத்தில் இரவு ரயிலுக்கு காத்திருந்த 21 வயதான பெண் ணை கடத்திச் சென்ற 4 பேரடங்கிய கும்பல் அப்பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யதுள்ளது.

தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் அப்பெண், செங்கல்பட்டில் உள்ள தனது தோழிகளை பார்த்துவிட்டு சைதாப்பேட்டையில் உள்ள தனது அறைக்கு செல்வதற்காக செங்கல்பட்டு ரயில் நிலையத்தில் காத்திருந்துள்ளார்.

அப்போது காரில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் இளம்பெண்ணை காரில் ஆள்நடமாட்டமற்ற பகுதிக்கு கடத்தி சென்று கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

அந்த இளம்பெண் அந்த கும்பலிடமிருந்து தப்பி அங்கிருந்த ஒரு வீட்டில் தஞ்சமடைந்துள்ளார். இளம்பெண்ணை மீட்ட அந்த பகுதியினர் பாதிக்கப்பட்ட பெண்ணை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

ஆரம்பக்கட்ட விசாரணையில், நால்வரில் ஒருவர், அந்தபெண்ணின் நண்பன் என்று அறியமுடிகின்றது.

சென்னை

# மோட்டார் சைக்கிளை திருடி ஆசை தீர ஓட்டிய சிறுமி

கள்ளச்சாவி போட்டு மோட்டார்சைக்கிள்களை திருடிய 16 வயது சிறுமி பெட்ரோல் தீர்ந்துபோகும் வரை ஆசை தீர ஓட்டிவிட்டு எரிபொருள் முடிந்துவிட்டதும் அந்த இடத்திலேயே நிறுத்தி செல்வதை வழக்கமாக கொண்டதும் தெரிந்தது.

சென்னை வண்ணாரப்பேட்டை மூலக்கொத்தளம் காத்பாடா பகுதியைச் சேர்ந்தவர் செரீப் (வயது 38). இவரது வீட்டின் முன் நிறுத்தி இருந்த மோட்டார் சைக்கிள் திருட்டுபோனதாக வண்ணாரப்பேட்டை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

கண்காணிப்பு கெமரா காட்சிகளை ஆய்வு செய்த பொலிஸார், அதே பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமியை கைது செய்தனர்.

அந்த சிறுமி, மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் அவரால் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வாங்க முடியாத நிலையில் இருந்தார். இதனால் ஆங்காங்கே நிறுத்தி இருக்கும் மோட்டார் சைக்கிள்களை கள்ளச்சாவி போட்டு திறந்து ஆசை தீர ஓட்டி மகிழ்ந்து வந்தார்.

இவ்வாறு பெட்ரோல் காலியாகும் வரை ஆசை தீர ஓட்டிய பிறகு பெட்ரோல் தீர்ந்ததும் அந்த இடத்திலேயே அந்த மோட்டார்சைக்கிள்களை விட்டுச்சென்று விடுவதை வழக்கமாக கொண்டிருந்ததும் விசாரணையில் தெரியவந்தது.

4 இடங்களில் சிறுமி திருடி, விட்டுச்சென்ற மோட்டார் சைக்கிள்களை பொலிஸார். பறிமுதல் செய்தனர். சிறுமியை மகளிர் பிரிவில் ஒப்படைத்துள்ளனர்.

திருப்பூர்

# துணிவு பட பாணியில் துணிந்த மாணவன் சிக்கினார்

குடும்பத்தின் வறுமையை போக்க துணிவு பட பாணியில் கல்லூரி மாணவன் ஒருவர், பொம்மை துப்பாக்கியுடன் வங்கிக்குள் நுழைந்து கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு சிக்கிக்கொண்டார்.


திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை அடுத்த அலங்கியத்தில் கனரா வங்கி உள்ளது. ஒரு மணியளவில் பர்தா, கையுறை அணிந்த ஒருவர் வங்கிக்குள் வந்துள்ளார்.

காசாளர் கூடத்துக்குச் சென்று சுற்றும்முற்றும் பார்த்தார். பின்னர் தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை திடீரென்று எடுத்து காசாளரை நோக்கி நீட்டி பணத்தை எடுத்துக்கொடு, இல்லை என்றால் சுட்டுக்கொன்று விடுவேன் என மிரட்டினார்.

பயந்து போன காசாளர், ‘அய்யோ திருடன், திருடன், என்னை சுடப்போறான்’ என கூச்சல் போட்டார். அப்போது அந்த ஆசாமி டைம்பாம் போல் ஒன்றை காட்டி வங்கிக்குள் வீசிவிடுவேன் என எச்சரித்துள்ளான். மேலும் அவனிடம் கத்தியும் இருந்தது. பின்னர் வங்கியில் இருந்த வாடிக்கையாளர்கள் அனைவரையும் ஒரு ஓரமாக சென்று அமரும்படி எச்சரித்தார்.

அவனிடம் துப்பாக்கி, டைம்பாம், கத்தி ஆகியவை இருந்ததால் பயந்துபோய் அவனை யாரும் பிடிக்க முயற்சிக்கவில்லை. இதற்கிடையில் துணிச்சலுடன் வாடிக்கையாளர் ஒருவர் மட்டும் பின்புறமாக வந்து அந்த ஆசாமியை திடீரென்று தாக்கினார். அதில் அந்த ஆசாமி நிலைகுலைந்தார். அதற்குள் அங்கிருந்தவர்கள் சுற்றிவளைத்து அவனை தாக்கி மடக்கிபிடித்தனர்.


பின்னர் பர்தாவை கழற்றியோது கறுப்புநிற முகமூடி அணிந்து இருந்தார். உடனே அவரிடம் இருந்த துப்பாக்கி, டைம்பாம் ஆகியவற்றை பறித்துக்கொண்டு அலங்கியம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.



### உளவு பலூன் சர்ச்சை:

# வொஷிங்டன் சீன பயணம் ரத்து

அமெரிக்காவின் மோண்டானாவில் உள்ள அணுசக்தி எவுதளத்தில் சீனாவின் உளவு பலூன் பறந்த விவகாரத்தை அடுத்து அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஆண்டனி ப்ளின்கன் தனது சீன பயணத்தை ரத்து செய்தார்.



சீன உளவு பலூன் பறக்கவிடப்பட்டது அமெரிக்க இறையாண்மைக்கு எதிரான திட்டமிட்ட தெளிவான அத்துமீறல் என்று அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த உளவு பலூன் 3 பெரிய பேருந்துகளை ஒன்றாக சேர்த்தது போன்ற அளவுக்குப் பெரியது என்று அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இது குறித்து அதிகாரிகள், "அமெரிக்காவின் மோண்டானாவில் உள்ள அணுசக்தி எவுதளத்தில் சீனாவின் உளவு பலூன் ஒன்று பறந்து வருவதைக் கண்டோம். நிச்சயம் அது ரகசியமான தகவல்களை சேகரிப்பதற்காக வந்ததாக நாங்கள் நம்புகிறோம். மக்களின் பாதுகாப்புக்காக அந்த பலுனை நாங்கள் சுடவில்லை. பலுனை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்" என்று தெரிவித்திருந்தனர்.

மேலும், மோண்டானாவில் காணப்பட்ட உளவு பலூன் போல் லத்தீன் அமெரிக்காவிலும் ஒரு உளவு பலூனை பார்த்ததாக பென்டகன் தெரிவித்துள்ளது. இந்நிலையிலேயே ஆண்டனி ப்ளின்கன் தனது சீன பயணத்தை இரத்துச் செய்துள்ளார்.




### உளவு பலூன் சுட்டு வீழ்த்தப்பட்ட விவகாரம்

# பீஜிங், சீனா கடும் கண்டனம்

உளவு பலூன் சுட்டு வீழ்த்தப்பட்ட விவகாரத்துக்கு சீனா கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவு விவகார அமைச்சகம் வெளியிட்டு உள்ள விளக்க அறிக்கையில், அது குடிமக்கள் பயன்பாட்டிற்காக சீனாவில் இருந்து வந்த ஆகாய கப்பல் வகையை சேர்ந்த விமானம். ஆராய்ச்சி பணியில், குறிப்பிடும்படியாக வானிலை ஆய்வு தொடர்புடைய பணியில் ஈடுபட கூடிய நோக்கத்திற்கானது.

மேற்கத்திய காற்று பாதிப்பால் மற்றும் குறைவான சுய இயங்கு தன்மையாலும், திட்டமிட்ட இலக்கை விட்டு அது திசைமாறி தொலைவுக்கு சென்று விட்டது என தெரிவித்து உள்ளது.

அமெரிக்க வான்பரப்புக்குள் தவறுதலாக நுழைந்ததற்காக எங்களது தரப்பில் வருத்தம் தெரிவித்து கொள்கிறோம். இதுபற்றி அமெரிக்க தரப்புடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு, எதிர்பாராது நடந்த இந்த சூழலை பற்றி விளக்குவோம் என்றும் தெரிவித்து உள்ளது.

எனினும், பென்டகனின் செய்தி தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் பேட் ரைடர் கூறும்போது, அந்த பலூன் தொடர்ந்து கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்க கண்ட பகுதியின் மையத்தின் மேல் செல்கிறது. அது மக்களுக்கு ராணுவ அல்லது உடலியல் சார்ந்த அச்சுறுத்தல்களை ஏற்படுத்தவில்லை என்பது பற்றி இந்த நேரத்தில் நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம். தொடர்ந்து அதனை கண்காணித்து முடிவுகளை பற்றி ஆய்வு செய்வோம் என கூறியுள்ளார்.

சீனா அளித்துள்ள விளக்கம் பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், சீன அரசின் விளக்கம் பற்றி நன்றாக எங்களுக்கு தெரியும். ஆனால், உண்மை என்னவெனில் அது ஒரு உளவு பலூன் என்பது எங்களுக்கு தெரியும் என கூறியுள்ளார்.

### உணவுக்கு உத்தரவாதமின்றி

# காபூல்: தவிக்கும் ஆப்கான் பெண்கள்



தேசிய, சர்வதேச அமைப்புகளில் பெண்கள் பணிபுரிய விதிக்கப்பட்ட தடை காரணமாக ஆப்கானைச் சேர்ந்த திருமணமாகாத பெண்கள், கணவரை இழந்த பெண்கள் உணவுக்கு உத்தரவாதமின்றி தவித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியதை அடுத்து அங்கு பெண்களுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நடுநிலை கல்வி மற்றும் உயர் கல்வி கற்க ஆப்கான் பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆண் துணை இன்றி பெண்கள் வெளியே செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தேசிய, சர்வதேச அமைப்புகளில் பெண்கள் பணிபுரியவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், வேலைக்குச் செல்லும் ஆண்கள் உள்ள குடும்பங்களில் மட்டுமே அனைவருக்கும் உணவு கிடைத்து வருகிறது. வயதான ஆண்கள், வேலைக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ள ஆண்கள் உள்ள குடும்பங்களிலும், ஆண்களே இல்லாத குடும்பங்களிலும் பெண்களின் வருமானத்தைக் கொண்டே இதுவரை அவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அதற்கான வாய்ப்பு தற்போது மறுக்கப்பட்டுள்ளதால், திருமணமாகாத பெண்கள், விதவைகள் உள்பட அதிக அளவிலான பெண்கள் உணவுக்கு உத்தரவாதமற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

# பீஜிங், சப்பாத்தி சுடும் பில் கேட்ஸ்

உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவராகவும், உலகின் மிகப்பெரிய நன்கொடையாளர்களில் ஒருவராக இருக்கும் பில் கேட்ஸ் பிரபல செஃப் எய்டன் பெர்நாத் உடன் இணைந்து சாப்பத்தி செய்த வீடியோ இணையத்தில் காட்டு தீ போலப் பரவி வருகிறது.



உலகின் மிகப்பெரிய டெக் சேவை நிறுவனமான மைக்ரோசாப்ட் நிறுவனத்தை உருவாக்கியதன் மூலம் இளம் வயதிலேயே பில்லியனர் ஆன பெருமைக்கு உரியவர் பில் கேட்ஸ். சமீபத்தில் பில் கேட்ஸ் அவருடைய மனைவி உடனான விவாகரத்து, எலான் மஸ்க் உடன் கருந்து வேறுபாடு ஆகியவற்றின் மூலம் சோகத்தில் உள்ளானார்.

இதை அனைத்தையும் மகிழ்ச்சியாக மாற்றும் வகையில் பில் கேட்ஸ் மகள் ஜெனிபர் கேட்ஸ் கர்ப்பமாக இருக்கும் செய்தி மூலம் தான் தாத்தாவாகப் போகும் செய்தியை கேட்டு மகிழ்ச்சியில் உச்சத்தில் இருந்தை பில் கேட்ஸ்-ன் 2022 ஆம் ஆண்டின் முடிவில் வெளியிட்ட பதிவில் தெரிவித்தார்.

பிரபல செஃப் எய்டன் பெர்நாத் உடன் இணைந்து இந்திய மக்களின் முக்கிய உணவாக இருக்கும் சாப்பத்தியை பில் கேட்ஸ் ஆரம்பம் முதல் தயாரித்த வீடியோ வெளியாகியுள்ளது. ரொட்டி சமைத்த வீடியோ வெளியிட்ட பில்கேட்ஸ்க்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். மேலும் திணை உணவுகளையும் சமைத்து பார்க்க அவர் அறிவுறுத்தியுள்ளார்.



# அமெரிக்கா மெத்தை உண்ணும் அமெரிக்க பெண்

மெத்தைகளை உண்ணும் வினோத பழக்கத்தை கொண்டுள்ளார் அமெரிக்க பெண்.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக இந்த விசித்திர பழக்கத்துக்கு அவர் அடிமையாகி உள்ளாராம்.

25 வயதான ஜெனிபர் என்கிற அந்த பெண் பிரபல அமெரிக்க டி.வி. சேனலில் ஒளிபரப்பாகும் 'என் விசித்திரமான போதை' என்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர் தனது 5 வயதில் இருந்தே மெத்தையை சாப்பிடுவதை பழக்கமாக கொண்டிருப்பதாகவும், முதன் முதலில் கார் சீட்டில் இருந்த பஞ்சுகளை எடுத்து சாப்பிட ஆரம்பித்ததாகவும் ஜெனிபர் கூறுகிறார்.

நாட்கள் செல்லசெல்ல பழக்கம் மோசமானதே தவிர, அதனை விட்டொழிக்க முடியவில்லை என்றும், தற்போது ஒருநாளில் ஒரு சதுர அடி மெத்தையை உண்ணும் அளவுக்கு அதற்கு அடிமையாகிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.



### சிம்பாப்வே– மேற்கிந்திய தீவுகள்

# முதல் போட்டி மழையால் தடை

சிம்பாப்பே அணிக்கும் சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான 2 டெஸ்ட் போட்டித் தொடர்களின் முதலாவது போட்டி சிம்பாபேயின் புலவாயோவில் நேற்று முன்தினம் (4) ஆரம்பமானது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றிப்பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்ததுடன், இந்த அணியின் ஆரம்ப வீரர்களாக அணித் தலைவர் பிராத்வெயிட்டும் ராம் நரேஸ் சந்தர்பாலும் களமிறங்கி அரைச் சதத்தை கடந்தனர்.

இதற்கமைய, 51 ஓவர்கள் முடிவில் மேற்கிந்திய தீவுகள் அணி 112 ஓட்டங்களை விக்கட் இழப்பின்றி பெற்றபோது, மழையால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.



# Blue Master அணி வெற்றி

**ஜலீல்**

உக்குவளை ரேன்ஜர்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான உதைப்பந்தாட்ட போட்டியில் Blue Master அணி வெற்றிப்பெற்றுள்ளது.

இந்தப் போட்டிகள் உக்குவளை- யாலேகம விளையாட்டுத் திடலில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, Blue Master அணியும் YellowMaster அணியும் இறுதி போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டன. அவ்விரு அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் Blue Master அணி 1 --0 புள்ளிகளைப் பெற்று வெற்றிபெற்றது.

நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்ட விளையாட்டு, இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்க வெற்றிப்பெற்ற அணிக்கு வெற்றிக்கிண்ணத்தை வழங்கினார்.




# பாடுமீன் சதுரங்க கழக வீரர்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவு

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான Novices Chess சுற்றுப்போட்டியில்,மட்டக்களப்பு "பாடுமீன் பாடுமீன் சதுரங்க கழக" வீரர்கள் பலர் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற சதுரங்க சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் பங்குபற்றிய 133 வீரர்களில் 32 வீரர்களும் பெண்கள் பிரிவில் 48 வீராங்கனைகளில் 16 வீராங்கனைகளும் அடுத்த கட்டப்போட்டிகளான Majors சதுரங்கப் போட்டிகளில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளனர்.

### உதைபந்தாட்ட போட்டிகளில்

# மொனராகலை சம்பியனானது



**அஸ்ஹர் இப்றாஹீம்**

14 மற்றும் 16 வயதிற்கு கீழ் நடத்தப்பட்ட சமபோச கிண்ணத்துக்கான உதைப்பந்தாட்ட போட்டிகள் அண்மையில் மெதகம பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதன்போது மொனராகலை- பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரி 14 மற்றும் 16 வயதுக்கு கீழ் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகள் இரண்டிலும் சாம்பியனானதுடன் சமபோச கிண்ண தேசிய மட்ட போட்டிகளில் பங்கு கொள்ளும் வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டது.

# தோனியின் தனியார் பள்ளிக்கும் நோட்டீஸ்

முன்னாள் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் எம்.எஸ். தோனிக்கு சொந்தமான தனியார் பாடசாலைக்கும் கர்நாடக பாடசாலை கல்வித்துறை சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

பெங்களூரு சிங்கசந்திரா பகுதியில் தோனிக்கு சொந்தமான சி.பி. எஸ்.இ. பாடசாலை இயங்குகின்றது. கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டுக்கு வந்தது. அங்கு 8ஆம் வகுப்பு வரையிலும் மாணவர்கள் பயிலுகின்றனர்.

இந்த நிலையில் அந்த பாடசாலை சி.பி.எஸ்.இ. அங்கிகாரம் பெற்ற பாடசாலை எனக் கூறிவிட்டு, மாநில பாடத்திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. எனினும், பெற்றோர்கள் சார்பில் கூறுகையில் மாணவர்களிடம் குறைந்தபட்சம் ரூ.1 லட்சத்திற்கும் மேல் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருவதும் தெரிந்தது. இதுகுறித்து பள்ளி கல்வித்துறை சார்பில் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



# சுதந்திர கிண்ணம் ராணி வசமானது

**செ.தி.பெருமாள்**

மஸ்கெலியா -ஆர்.பி.கே. பிளான்டேசனுக்கு உரிய மஸ்கெலியா ப்ரௌன்ஸ்வீக் தோட்டத்தில் நடாத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் ராணி தோட்டப் பிரிவு வெற்றிப் பெற்றது. குறித்த போட்டியில் ப்ரௌன்ஸ்வீக் தோட்டத்தின் ஏழு பிரிவுகளில் உள்ள 14 அணிகள் இந்த போட்டியில் கலந்து கொண்டு விளையாடின . அணிக்கு 7 பேர் கொண்ட 3 ஓவர் போட்டியாக நடத்தப்பட்ட இப்போட்டியில் முதலாவது இடத்தைப் ராணி தோட்டப் பிரிவு பெற்று, சுதந்திர தின கேடயத்தைத் தட்டிக் கொண்டது.

இரண்டாவது இடத்தை மோட்டிங்ஹேம் பிரிவும் மூன்றாவது இடத்தை கெஸ்கிபன் பிரிவும் தட்டிக் கொண்டன. தோட்ட நிர்வாகம் மற்றும் பெயாடிரேட் நிறுவனம் ஆகிய இப்போட்டிகளுக்கு அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 06 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.